ISSN 2719 - 2520

# முத்தமிழ் கலசம்

இருமாதத்திற்கொருமுறை

செப் - அக்டோபர் 2023

ஆண்டு 4 ▲ இதழ் 02

விலை : 200 / -



## ஆளுமை அறிமுகம்

## கலாநிதி மரீனா இல்யாஸ் ஷாபீ


இது நம்ம
அரங்கம் TV
fb/www.arangamtv.com
இசையால் இணைவோம்
முதல் அகவையைப் பூர்த்தி
செய்திருக்கும் அரங்கம் டீவி
Arangam TV
வாழ்த்துக்கள்
1st Year
ANNIVERSARY
Celebration
25 th August 2023

# முத்தமிழ் கலசம்

இருமாதத்திற்கொருமுறை
**செப் - அக்டோபர் 2023**
ஆண்டு 4 ▲ இதழ் 02


ஆசிரியர் : சித்தி வஃபீரா
editor & publisher : Sithy Wafeera

சிறப்பாசிரியர் : தமிழ்நெஞ்சம் அமின்
Hon. editor : Tamilnenjam Amine



ஆசிரியர் குழு :

Dr ஜலீலா முஸம்மில்
கமர்ஜான் பீபீ
ஆர்.ஜே. பிரகலாதன்
நிலு டீன்
மின்னத் ஸறா பரூஸ்


படைப்புகளின் கருத்துக்களுக்கு ஆக்கதாரரே பொறுப்பு. ஆக்கங்களை சுருக்கிட, திருத்தியமைக்க ஆசிரியருக்கு உரிமையுண்டு. நூல்கள் அறிமுகம், மதிப்புரை, விமர்சனங்களுக்கு 2 நூல்கள் அனுப்புதல் அவசியம்.


படைப்புக்கள் அனுப்பவேண்டிய முகவரி:

email :
muththamizh.kalasam@gmail.com

The editor of "Muththamizh kalasam",
23, Amarasekara Mawatha,
Colombo 05., Sri lanka


எழுதுகோலின் கூர்முனை கொண்டு
நல்லவை விதைப்போம். அல்லவை புதைப்போம்

## ஆசிரியர் பக்கம்

அனைத்து வாசக அன்பர்களுக்கும் அன்பார்ந்த வணக்கம்!

வருகிற செப்டெம்பர் 8 ஆம் திகதியை உலக எழுத்தறிவு தினமாகக் கொண்டாடி வருவது அனைவரும் அறிந்ததே! ஒரு நாட்டின் வளர்ச்சியில் பெரும்பகுதியானது எழுத்தறிவை அடிப் படையாகக் கொண்டே அமைகிறது என்று சொல்லலாம். ஒரு நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்பு வதற்கும், அதை கட்டிக் காப்பதற்கும் எழுத்தறிவு உறுதுணையாய் செயற் படுகிறது. இலங்கையைப் பொறுத்தவரை எழுத்தறிவு 92% இருப்பது மகிழ்ச்சியான மனதுக்கு ஆறுதலைத் தரக்கூடிய செய்தி யாக அமைந்திருக்கிறது. வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்கள் கூட, கல்வியின் மகத்துவத்தை புரிந்து கொண்டு தம் பிள்ளைகள் படிப்பதில் அக்கறை காட்டி வருவதும் மகிழ்ச்சிக்குரிய மாற்றமே!

நாம் எமது வசதிக்கேற்ப ஒரு ஏழைக் குழந்தையின் கல்விக்கான செலவை பொறுப் பெடுத்தால் கூட, எம் நாட்டு எழுத்தறிவு வீதத்தை இன்னும் அதிகரிக்க முடியும். எந்த ஒரு தொழில்துறையும் எழுத்தறிவை அடிப்படையாகக் கொண் டிருந்தால் மட்டுமே பாரிய வளர்ச்சி என்பது சாத்தியப்படும். எழுத்தாளர் களின் பேனைமுனையும், எழுத்தறிவு கொண்டோரின் புத்திக் கூர்மையும் சரித்திரம் படைக்கட்டும்!

– சித்தி வஃபீரா
ஆசிரியர்



# கூண்டுக்கிளியே கண்ணம்மா!

கூண்டில் கிளியானாய்
குடத்தில் விளக்கானாய்
கண்ணம்மா!
ஏண்டி இந்நிலை
சற்றும் மாறாதோ
செல்லம்மா?

பெண்ணின் உயர்வான
பெருமைதனை முடக்குகிறார்
கண்ணம்மா!
கண்ணின் மணியென்று
கடைசியில் முழக்குகிறார்
செல்லம்மா!

தீயபிறவி இதுதானோ
தீய்ந்திடாதே கண்ணேயென்
கண்ணம்மா!
நோயதனைப் போக்கும்
மாமருந்து பெண்களே
செல்லம்மா!

துணிவே படைக்கலமாய்
தூய்மை படைத்திடுவோம்
கண்ணம்மா!
மணியாய் மணிவிளக்காய்
இருளதனைத் துடைத்திடுவோம்
செல்லம்மா!

நாம்தான் இராணித் தேனீ
நம்மைச்சுற்றி தேன்கூடு
கண்ணம்மா!
வெம்பாதே! புதையாதே
வேதனையில்.பொங்கியெழு
செல்லம்மா!

எதற்காக அஞ்சவேண்டும்
எதற்காக கெஞ்சவேண்டும்
கண்ணம்மா!
பதறாது சிதறாது
பக்குவமாய் ஆட்சிபுரி
செல்லம்மா!

முனைவர்.கிருட்டிணதிலகா
போரூர். சென்னை.



## வருக வருக வருகவே !

**கண்களில் வெளிச்சம் கண்டுநான்**
**காவியம் படைக்க முனைகிறேன்**
**கனவே நாளும் வருகவே!**

**பெண்களில் பொறுமை கண்டுநான்**
**பெருமையும் கொண்டேன் மனத்தினில்**
**பேசும் தெய்வம் வருகவே!**

**எண்ணமும் சிறக்கக் கண்டுநான்**
**என்றுமே இறையை வணங்கினேன்**
**ஏற்றம் தரவே வருகவே!**

**திண்ணமாய் உலகைக் கண்டுநான்**
**தீட்டுவேன் கவிகள் விழிதனில்**
**திரும்பிப் பார்க்க வருகவே!**

சரஸ்வதி பாஸ்கரன்

# தனித்துவம்

மனதின் கருவே எண்ணமாகும்
எண்ணங்களின் பிரசவிப்பே
சொல்லாகும்
உணர்வுகளின் வெளிப்பாடே
செயலாகும்.

எண்ணமும்,சொல்லும், செயலும்
ஒன்றிப்போனால் அதுவே
தனித்துவம்
நித்தமும் தனித்துவமே
ஆளுமையின் அடையாளம்

சொல்லொன்றும்
செயலொன்றுமானால்
அதுவே நயவஞ்சகம் அதுவே
சுயநலம்

சா.நாகூர் பிச்சை
திண்டுக்கல்



# வெள்வித்தீயில்

## உடுவிலூர் கலா

### மதிப்பீடு : சிறீ சிறீஸ்கந்தராசா

எடுத்த எடுப்பிலேயே தான் ஒரு
பெண்ணியவாதி என்பதனையும்,
என்னிடத்தில் வேறு எதனையும்
எதிர்பார்க்காதீர்கள் என்றும்
தன் எழுத்துகளுக்கு
இப்படி ஒரு
வரையறையை வகுத்துக்
கொள்ளுகிறார்.

முதலில் இந்த நூல் பற்றி
இவர் தருகின்ற வாக்கு
மூலங்களை இங்கே பதிவு
செய்கிறேன்.




"சிந்தனையின் வரிகளை
அவளின் விடிவுக்காய்,
கட்டுரைகளாக,
கவிதைகளாக, சிறுகதைகளாக,
பெண் மொழிகளாகத் துணிந்து
எங்கும் எழுதினேன்"

"எழுதாத விதிகளை,
எழுத்தெண்ணிப் படிக்கும்
பெண்களை
விழிப்படையச் செய்யவேண்டியது
காலத்தின் கட்டாயக் கடமை.
இதில் எனக்கும் உங்களுக்கும் பெரும்
பங்குண்டு. இப்படைப்பு
பெண்களின் கண்ணீர் துடைக்கும்
கரங்களாக அமைய இறைவன்
கிருபை புரியட்டும்"

இவரின் கவிதைகள் பொய்
சொல்லாதவை.
பொறுத்துக் கொள்ள முடியாதவை.
பூமிப்பந்தில் எங்கும் புரட்சியை
ஏற்படுத்தும்
வல்லமை வாய்ந்தவை.

உடலில் காயங்களை
ஏற்படுத்தாதவை.
ஆனால் உள்ளத்தில் என்றென்றும்
மாறாத வடுக்களைத் தந்துவிட்டு
அமைதியாக உறங்காதவை!

ஆத்திரம் கொண்டவை!
ஆணாதிக்கத்தைச்
சீண்டிப் பார்ப்பவை!
எங்கேயும் எப்போதும்
எதற்காகவும்
சமூகத்தோடு சமரசம்
செய்யாதவை!

இவரின் கவிதைகள்
சாட்டைகளை எடுத்து
வீசுகின்றன!
சமுதாயத்தின் மீது காறி
உமிழ்கின்றன!

படைப்பில்கூட இறைவன் தமக்கு
ஓரவஞ்சனை செய்துவிட்டான்
எனக் கொதித்தெழுகின்றன!

ஆணின் ஆற்றாமைகளையும்
அவனது சின்னத் தனங்களையும்
சில்லறைப் புத்திகளையும்
சந்தியில் போட்டு உடைக்கின்றன.

ஏய் ஆணாதிக்கமே...
உன் பழைய புராணங்களையும்...
பொய்க் கதைகளையும் இனியும்
எம்மீது திணிக்காதே!

காலம் மாறும்போது உன்
பொய்த்துப்போன
சட்ட திட்டங்களையும் பொய்ப்
பிரச்சாரங்களையும்
இனியும் பொறுத்துக்கொண்டு
உன்னோடு வாழ்க்கை நடத்த
உனக்கு முந்தானை விரிக்க இனியும்
இந்தப் பெண்ணினம் தயாராக வில்லை!

ஏய்... ஆணினமே!
அடிமை மோகம் கொண்ட
ஆணாதிக்கமே!
உன் தீர்ப்பை மாற்றி எழுது...
இல்லையேல்... சிக்கித் தவித்து
சீரழிந்து
சின்னா பின்னமாகி விடுவாய்.
இது பெண்ணினத்தின் சார்பாக
விடுக்கப்படும் சாபம் என்று நீ
அறிந்துகொள்!

"ஆதிக்க வேள்வித் தீயிலவள்

அனலிடை மெழுகாய் வசைபாடி
அலங்கரிக்கும் வக்கிர மாந்தர்தம்

இவரின் பெரும்பாலான கவிதைகள்
எல்லாமே
பெண்ணின் துயரச் சுமைகளைச்
சொல்லாமல் சொல்லுகின்றன!

"ஓடும் நதியும் வீசும் காற்றும்
பாடும் குயிலும் உன்பெயர் சொல்ல

பாடுகள் சுமக்கும் பாவை நீயோ
தேடுவது எதுவோ மனதுறை
அமைதியோ

படைப்பில் மகிழ்ந்து பாரினில் விரவி
துடைக்கும் விழிநீர் துயரினைச்
சொல்ல"

பெண்ணின் பாடுகளையும் அவளின்
விழிநீர்
துடைக்கும் செய்திகளையும் இந்த
சமூகத்தை நோக்கி வீசுகிறார்.

இவர் காறி உமிழும் ஒவ்வொரு
எச்சில் துளிகளும்
ஒவ்வொரு ஆணின்மீதும்
தெறிக்கத்தான் செய்கிறது.

"தெருநாய்கள் கூட்டம் தேடியுனை
வந்தனவோ
உருக்குலைத் துயிர்பறித் துற்றபசி
தீர்த்தனவோ

அழகான உன்னுடலை அகத்துறிஞ்சி
மகிழ்ந்தனவோ
அழகாகச் சவுக்குவீசி
அணிஅணியாய்ப் பேசினவோ"

ஆணாதிக்கத்தை சுட்டெரிப்பதற்கு
இவர் எடுத்துக்கொண்ட
தீப்பந்தம் கவிதையாகும்.

இவர் நடத்தும் வேள்வித் தீயில்
இன்றைய ஆண் வர்க்கம்
மட்டுமல்ல வருங்கால சமுதாயமும்
பொசுங்கப் போவது உறுதி!

இவரின் ஒவ்வொரு எழுத்தும்
ஒவ்வொரு கூரிய ஈட்டிமுனையாகும்.
குறிதவறாது ஆண்வர்க்கத்தையே
குத்திக் குதறி குருதிப் புனலெடுத்து
கூந்தலிலே தடவி தன் வேள்வியை
முடித்துகொள்ளும் வல்லமை
வாய்ந்தவை.

"பேசாப் பொருள் பேசுவோம்"
என்ற தலைப்பின்கீழ் தீப்பந்தங்களை
ஒவ்வொன்றாக வீசி வேள்வித்தீயில்

*அர்ச்சனை செய்கின்றார் பாருங்கள்.*

*"அடுக்களையில் அடங்கியவள் அன்று*
*மிடுக்கோடு மிளிர்கிறாள் இன்று .....*

*ஓயாத கண்ணீரைப் பேசுவோம்*
*தொலையாத துயரினைப் பேசுவோம்.*
*.....*
*ஆணாதிக்கத் தோள்களில்*
*பிணமாய் ஊர்வலம் போகும்*

*அத்தனை பெண்ணுக்கும்*
*மனு நீதி கேட்போம் .....*

*சமூகம் பேசமறுக்கும் உண்மையை*

*இவரின் பெண்ணிய வாதக்*
*கவிதைகளையும்*
*ஆணாதிக்க எதிர்ப்பு*
*எறிகணைகளையும்*
*ஒப்பு நோக்குமிடத்து பின் வரும்*
*முடிவுக்கு*
*நாம் வருகின்றோம்!*

*இதுவரை எழுதிய*
*இலக்கணங்களுக்குள்*
*உன் வீரியத்தை அடக்கிவிட*
*முடியவில்லை!*

*உனக்குரிய இலக்கணத்தை நீயே*
*எழுதிக்கொள்!*
*உனக்குரிய கரைகளை நீயே எல்லை*
*இட்டுக்கொள்!*

*தாலியும் வேலியும் உனக்குத் தடைக்*
*கற்களாகுமா?*

*பூவும் பொட்டும் உன் போக்கினை*
*நிறுத்துமா?*

*தர்மமும் நீதியும் உனக்கு சாதகமான*
*தீர்ப்பு வழங்குமா??*

*சட்டம் உன்னை தடை*
*செய்யட்டும்!!*
*சமுதாயம் உன்னை கூண்டில்*
*ஏற்றட்டும்!*

*திக்குகள் வெளுக்கட்டும்! திசைகள்*
*வழிவிடட்டும்!*
*விலங்குகள் தெறிக்கட்டும்!*
*விடியல்கள் என்றென்றும்*
*உனக்காகட்டும்!*

*உன் நிமிர்வு கண்டு*
*என்பேனா என்றென்றும்*
*வாழ்த்துரைக்கட்டும்!!*

*உன் வேள்வித்தீயின் வரங்களை இந்த*
*மானுட சமுதாயம் என்றென்றும்*
*அனுபவிக்கட்டும்!*

**சிறீ சிறீஸ்கந்தராஜா**
*07/08/2023*

*அண்மையில் வெளிவந்த*
*பெண்ணியம் பேசும்*
*சிறப்பான கவிதைத் தொகுப்புக்களில்*
*இதுவே முதன்மையானது என*
*வழிமொழிந்து*
*எனது படைப்பு ஒன்றினை இதற்கு*
*வலுச்சேர்க்கும் முகமாக*
*இலவச இணைப்பாக இங்கே*
*பகிர்ந்து கொள்ளுகிறேன்.*

# தலைநிமிர்ந்து வா!!

எனக்கும் விருப்பம்தான்
உனக்காகக் குரல் கொடுக்க!

மண்பார்த்து நடந்த போது
மதிக்காத இவ்வுலகம்
நீ நேர்நடை இட்டபோது
வாழ்த்துரைக்கிறது!

பெண்ணாக இருந்தபோது
எறிகணைகள் வீசப்பட்டன.
நீ புயலாகப் பிறந்த போது
பூமாலைகள் விழுகின்றன!

பூவுக்கு உவமை சொன்னார்
பொறுமைக்கு இலக்கணம் என்றார்
போர்க்கருவி பிடித்தபோது
புரட்சியின் சின்னம் என்றார்!

அடுப்பிலிருந்து அவிந்தபோது
உலகம் உன்னைப் பார்க்கவில்லை!
நீ தீப்பிழம்பாய் வெடித்தபோது
திசைகளெல்லாம் உன்விலாசத்தை
விசாரிக்கத் தொடங்கின!

துப்பாக்கி தூக்கினால்தான்
உன் துயரம் தொலையுமென்றால்
அதில் தப்பேதுமில்லை!

எனக்கும் விருப்பம் தான்
உனக்காகக் குரல் கொடுக்க!!

தமிழீழப்பெண்ணே
நீ தலைநிமிர்ந்து வா!!

சிறீ சிறீஸ்கந்தராஜா
*07/08/2023*

# எழுதித் தீர்க்கிறேன்

**சாரலில் தீரத்தீர
நனைந்த ஓர்கனவை
நிசமென நினைத்து
எழுதித் தீர்க்கிறேன்
நெருஞ்சியான
சொற்களை கழுவிலேற்றி...
உயிர்த்தெழுந்த
பிரார்த்தனைகளின்
பாதையில்
சுமைகளை இறக்கிவைத்து,
தொலைத்ததாய்
ஒப்பனை பூசித்திரியும்
மானங்கெட்ட மனசு...
ஒப்புக்காய் பேசும்
இனிப்புச் சொற்கள்
நேற்றைய மௌனத்தை
உடைத்துக் கொட்டும்
அருவியென
ஆசுவாசத்துளிகளாய்
விழிநீர்...
மனதின் காயத்தை
மொத்தமாய் துடைத்தெடுத்து
கன்னம் நழுவி
நெஞ்சம் தழுவி
தாயெனவே
கட்டவிழ்க்கிறது
நிலவென நேசத்தை...**

**லீலா...**



# கடுகதி உன் கதி முடிக்கும்

அறிந்து கொள்
தினமும் நீயே
தஞ்சமென்று நம்பி
காரியம் முடிக்க
காத்திருக்கிறார்கள்
அவர்கள்.

நம்பி வந்தோரை
கணப்பொழுதுக்குள்
அகால மரணத்துள்
ஆட்படுத்தி விடாதே.

சட்ட திட்டங்கள்
உன்னைக்
கட்டுப்பாட்டுக்குள்
கட்டுப்படுத்தி வைக்கும்
சட்டத்தை மதித்து
கட்டுப்பட்டு நடந்திடு

அதிவேகம் உன்
கதி முடிக்கும்
அளவோடு பயணி

போட்டி போட்டு
முந்திச் செல்ல முயலாதே
மரணம் உன்னை
போட்டி போட்டு
அழைத்திட
ஆயத்தமாகிடலாம்
கவனங்கொள்

போதை யுண்டு
பாதை  தவறி
பாதாளத்துள் விழாதே
மனங் கொள்.
பாவம்
உன்னை நம்பி
பயணப்பட்டவர்கள்

விபத்தில் சிக்கி
கைகால் சிதைந்து
ஊனமுற்று
காலம் முழுவதும்
வைத்திய சிகிச்சையுடன்
விரக்தியுற்று
வாழ்வைக் கழிப்பவர்கள்
ஏராளம்

நொடிப் பொழுதில்
மரணத்தை அணைத்து
வாழ்வை முடித்தோரும்
அவனியில் அநேகர்

வாழவும் முடியாமல்
சாகவும் இயலாமல்
நடைப்பிணமானோர்
நானிலத்தில்
எத்தனையோ பேர்
நினைத்துப் பார்

தனியொருவர் தவறால்
பலியாகும் உயிர்கள்
பரிதவிக்கும் உறவுகள்
அநாதையாய் விதவையாய்
ஆறாத வடுக்களுடன்
தீராத் துயரத்துடன்
தவிக்கின்ற இதயங்கள்
தரணியிலே  தாராளம்.

நிதானம்
நீண்ட ஆயுளை தரும்
விவேகம் கொண்டு
வேகம் குறை.
நீயும் நானும் அவர்களும்
தீர்க்காயுளுடன்
தரணியில் வாழலாம்

## ஹாஜறா கலீலுர் ரஹ்மான்
காத்தான்குடி.

# காலைப் பொழுதில் காதல்செய்

கதிரவன் உதிக்கும் முன்னெழுந்து
காண்பாய் இணையின் முகவடிவை
மதியொளி பரப்பும் அவளழகில்
மயக்கம் கொள்வாய் காதலாலே!
நதியினில் குளித்த சுகத்தினையே
நாளும் பெறுவாய் மனத்தினிலே!
உதிரமும் சுழன்று புத்துணர்வை
உனக்கே அளிக்கும் உயிர்வாழ

உனக்கவள் உழைத்த களைப்புநீங்க
உறங்கும் அழகை காண்பாயே
கனவினைக் காணும் அவள்விழியை
கவிதை என்றே சொல்வாயே
மனபலம் நீதான் என்றெண்ணி
மயங்கும் துணையை அணைப்பாயே
கணத்தினில் மறையாக் காதலைத்தான்
காலைப் பொழுதில் சொல்வாயே !

உறவென வந்த உத்தமியை
உனக்குள் வைத்தே காப்பாயே!
பறவையைப் போலே அவள்பறக்க
பணிவாய் சிறகாய் மாறுவாயே!
அறவழிக் காட்டும் அவள்திசையில்
அழகாய்ப் பயணம் செய்வாயே!
உறவுகள் போற்றும் ஒருயிராய்
உலகில் நீயும் மிளிர்வாயே !

ந.பாண்டியராசா

# சுந்தரத் தமிழ்

## முனைவர் கா.ந.கல்யாணசுந்தரம்

**நதியில் விளையாடி கொடியில் தலைசீவி**
**நடந்த இளம் தென்றலே வளர்**
**பொதிகை மலை தோன்றி மதுரை நகர் கண்டு**
**பொலிந்த தமிழ் மன்றமே**

*என கவியரசர் கண்ணதாசன் எழுதிய வரிகளில் சுந்தரத் தமிழின் தொன்மை இங்கே சிறப்பாக எடுத்துக் காட்டப்பட்டது அத்தகு மேன்மை பொருந்திய தமிழ் மொழியின் சிறப்புகளை பக்தி இலக்கியம் தொடங்கி புதுக்கவிதைகள் வரையிலான சிறப்பான சொல்லாடல்கள் நிறைந்த கவிதை மொழியைக் காண்போம்*

**சுந்தரர்... தேவாரம் பாடிய சுந்தரத் தமிழ்**
**பித்தா! பிறைசூடி! பெருமானே! அருளாளா!**
**எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்து உன்னை**
**வைத்தாய், பெண்ணைத் தென்பால்**
**வெண்ணை நல்லூர் அருள் துறையுள்**
**அத்தா! உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனலாமே!**

*அடடா ...அடடா என்னே தமிழ் மொழி செம்மையுற வைத்த சுந்தரரின் பாடல் வரிகள்.*

**‘மாசில் வீணையும் மாலை மதியமும்**
**வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்**
**மூசு வண்டறை பொய்கையும் போன்றதே**
**ஈசன் எந்தை இணையடி நீழலே‘**

*- தூய தமிழ்ச் சொல்லாலே பரவசம் தரும் பக்தி இலக்கியமாய் நாவுக்கரசர் நவின்ற நற்றமிழ்ப் பாடல் இது... வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்... இதைவிட எப்படிச் சொல்ல முடியும் இயற்கையின் இனிய சூழலை. அற்புதம் என்பேன்.*

**செந்தமிழே ! உயிரே ! நறுந்தேனே !**
**செயலினை மூச்சினை உனக்களித்தேன்**
**தமிழுக்கும் அமுதென்று பேர் ! – அந்தத்**
**தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்**

கனியிடை ஏறிய சுளையும் – முற்றல்
கழையிடை ஏறிய சாறும்,
பனிமலர் ஏறிய தேனும் – காய்ச்சுப்
பாகிடை ஏறிய சுவையும்,
நனிபசு பொழியும் பாலும் – தென்னை
நல்கிய குளிரிள நீரும்,
இனியன என்பேன் எனினும் – தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர் !

இனிமைத் தமிழ்மொழி எமது – எமக்கு
இன்பம் தரும்படி வாய்த்த நல் அமுது !

*தகைசால் தமிழுக்கு மகுடம் சூட்டி செம்மாந்து நடைபோட்ட புரட்சிக் கவிஞன் பாரதிதாசன் பகன்ற புதுக்கவிதை மொழி… சுந்தரத் தமிழின் செம்மொழி*

மங்கை ஒருத்தி மலர்கொய்வாள் வாண்முகத்தைப்
பங்கையம் என்று எண்ணிப் படிவண்டை – செங்கையால்
காத்தாள் அக் கைமலரை காந்தள் என பாய்தலுமே
வேர்த்தாளை காண் என்றான் வேந்து!

பெரும்புலவன் புகழேந்தியின் நளவெண்பா
நவின்ற செம்மொழித் தேர்

பொன் வண்டொன்று மலரென்று முகத்தோடு மோத
நான் வளைகொண்ட கையாலே மெதுவாக மூட
என் கருங்கூந்தல் கலைந்தோடி மேகங்கள் ஆக
நான் பயந்தோடி வந்தேன் உன்னிடம் உண்மை கூற!

*அடடா இது கன்னல் தமிழால் கண்ணதாசன் அளித்திட்ட கவிமொழி…கவின் மொழி …சுந்தரத் தேன் மொழி தமிழ் மொழியன்றோ !*

சித்தமெல்லாம் எனக்கு
சிவமயமே இறைவா
உன்னை சேவித்த கரங்களுக்கு
இல்லை பயமே

அத்தனில்லாமல் ஒரு அம்மை இல்லை
அந்த அம்மையில்லாமல்
இந்தப் பிள்ளை இல்லை

பக்திப் பெருக்கில் எந்தன் ஊன் உருக
அந்த பரவசத்தில் உள்ளே உயிர் உருக

*இங்கே பாருங்கள்... ஊன் உருக, உயிர் உருக சுந்தரத் தமிழ் இங்கே நம் உள்ளத்தை உருக்குகிறது அல்லவா கண்ணதாசனே நீ எங்கள் திருவருட்ச்செல்வன் சுந்தரத் தமிழன்...*

தண்டலை மயில்கள் ஆட, தாமரை விளக்கம் தாங்க,
கொண்டல்கள் முழவின் ஏங்க, குவளை கண் விழித்து நோக்க,
தெண் திரை எழினி காட்ட, தேம் பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட, - மருதம் வீற்றிருக்கும் மாதோ

*நற்றமிழ்க் காவியம் படைத்த கம்பனின் கவிநய வரிகளில் சுந்தரத் தமிழ் தாண்டவ மாடுகிறதே !*

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்;
பாமரராய், விலங்குகளாய், உலகனைத்தும்
இகழ்ச்சிசொலப் பான்மை கெட்டு,
நாமமது தமிழரெனக் கொண்டுஇங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்லீர்!
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்.

*தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்த வேண்டும் என்ற பாரதியின் கனவு இன்று பலித்திருக்கிறது அல்லவா. கலைஞர் அவர்கள் முன்னெடுத்த செம்மொழி என்கிற பெயர் சூட்டல் தமிழுக்கு மகுடமாக அமைந்தது உலகெங்கும் வாழும் தமிழர்களுக்கு அணி சேர்க்கிறது.*

*விளக்கை அணைத்துவிட்டு வீட்டுக்குள் புகுந்த திருடன்.. அகப்பட்டதை சுருட்டிக் கொண்டு அகப்படாமல் ஓடியதுபோல்...*

மறைந்திருந்து மானமிகு வாலியை வீழ்த்திய,
மாண்புமிகு ராமச்சந்திரனை...
மாவீரன் என்று போற்ற மகாகவி கம்பனே
தயங்கினானென்றால்...
மாண்டாலும் வெற்றி வாலிக்குத்தானே...
ஆண்டாலும் அவன் தம்பி சுக்ரீவன் துரோகி தானே...
எனவே விழுந்தாலும் விழுப்புண் பெற்றவர்தான்
வீரர்கள் பட்டியலில் இடம்பெறுவர்...
தாழ்ந்தாலும் தமிழன் தன்மானம் இழந்து
தன் தலையை மட்டும் தாழ்த்தமாட்டான்□

*கவிதை மொழியில் மட்டுமா?... பேச்சு மொழியிலும் வார்த்தை விளையாட்டிலும் இந்தச் சுந்தரத் தமிழ் கலைஞருக்கே சொந்தமானது ! வார்த்தை விளையாட்டுகளில் மூழ்கி முத்தெடுத்தவர் கலைஞர்.*

வண்ண தமிழ் பெண்ணொருத்தி என்னெதிரில் வந்தாள்
கண்ணசைவில் கோடி கோடி கற்பனைகள் தந்தாள்.

அன்னம் கூட அவளிடத்தில் வந்து நடை பயிலும்
ஆடல் கலை இலக்கணத்தை அறிய வரும் மயிலும்
இன்னிசையை பாடம் கேட்க எண்ணி வரும் குயிலும்
இயற்கையெல்லாம் அவள் குரலின் இனிமையிலே துயிலும்

*தமிழ்ப்பெண் என்பவளின் தோற்றம் அவளது நடையழகு போன்றவற்றை இப்படியன்றி எப்படிச் சொல்லமுடியும் ?*

*ஆம்... சுந்தரத் தமிழ் மொழியில் நாம் பிறந்தோம் வளர்ந்தோம் என்றால் பெரும் பேறு பெற்றுள்ளோம் என்பதுதான் உண்மை. தொடர்ந்து சுந்தரத் தமிழ் கொண்ட கவித்துவம் மிக்க இலக்கிய இன்பத்தை முத்தமிழ் கலசம் இதழ் வழி பயணிப்போம்.*

---

## இயற்கையை காதல் செய்

சூரியனின் ஸ்பரிசத்தில் நிலைகுலைந்த மொட்டு மலரானது
சூழ் முகில்கள் அணைப்பில் நீராவி நிலைமாறி மழையானது
வான்பரப்பின் வளைவில் ஒளிகதிர்கள் வண்ணமயமானது
வாத்தியங்கள்கூட மீட்டிடாத குயில்பாட்டு இசையானது

புல் நுனியில் முத்தமிடும் பனித்துளிகள் கவியானது
புயலாக மாறாத மெல்லசைவு வருடிடும் தென்றலானது
படை படையாய் தொடர்கின்ற வனமோ இயற்கையின் கொடையானது
பல்லுயிரும் வாழும் அளப்பரிய உலகோ நிலையானது

அலை மோதும் நீர்யாவும் நுரையாகி கரை சேருது
அழகான மொழியாக இயற்கையோ எழில் கொஞ்சுது
இயற்கையை காதல் செய்து காத்திட வா
இளமையே உன்னுடலில் நிலையாக குடிகொள்ளும் பார்

கவிக்காதலன் குலசிங்கம் கிலசன்
கல்முனை



# பெண் என்ற 'அவள்'

அன்பின் உருவமானவள்
ஆணுக்குத் துணையுமவள்
அகிலத்தின் அற்புதமவள்
அவனியை அலங்கரிப்பவள்
அனைவருக்கும் அன்னையவள்.

பேதையாய் அவள்
பெதும்பையாய் அவள்
மங்கையாய் அவள்
மடந்தையாய் அவள்
தெரிலையாய் அவள்
அரிவையாய் அவள்
பேரிளம் பெண்ணாய் அவள்
ஏழு பருவங்கள் எய்தியவள்.

வீட்டையும் ஆள்வாள்
நாட்டையும் ஆள்வாள்
விண்ணுக்கும் செல்வாள்
வீண் பழியும் சுமப்பாள்
பெண்ணியமும் பேசுவாள்
கண்ணியமும் பேணுவாள்
பொறுமையும் காப்பாள்
வாய்மையும் வெல்வாள்
தூய்மையாய் இருப்பாள்
தாய்மையை சுமப்பாள்.

அவளது பாத்திரத்தில்
அழகாய் ஜொலிப்பாள்.
அன்பாய்ப் பழகுவாள்
அவஸ்தையும் படுவாள்.
அமைதியும் காப்பாள்

அவளை அவமதித்தால்
அக்கினியாய்ச் சுடுவாள்.
அவளை அனுசரித்தால்
அன்பால் அரவணைப்பாள்.
அமுதான புன்சிரிப்பால்
அழகாய் உபசரிப்பாள்.

அத்தனை வரங்களையுமவள்
அருங்குணமாய்ப் பெற்றவள்.

தாயாய்
தாரமாய்
மகளாய்
மருமகளாய்
தங்கையாய்
தமக்கையாய்
அத்தையாய்
பாட்டியாய்
பூட்டியாய்....



பூமியில் பிறந்த தேவதையவள்
பூவைப் போன்ற பூவையவள்.

சில நேரங்களில்....

புழுதி படிந்து அழுக்காகியும்
விடுவாள்
புழுவாய்த் துடித்து அவதியும்
படுவாள்.

பாசத்தில் வீழ்ந்து
அடிமையும் ஆகிடுவாள்
பாலியல் கொடுமைக்கும்
ஆளாகி விடுவாள்.
அவமானத்தால் அல்லலும் படுவாள்
அவலங்களை எதிர்த்தும்
போராடுவாள்.

அவள் ஒரு ஆழமான கடல்.
அவள் சினம் கொண்டால்
அவர்கள் மூழ்கி விடுவார்கள்.
'அவள்' அன்பு கொண்டால்
'அவர்'கள் பூமி ஆள்வார்கள்.

அவள் தான்
பெண் என்ற பெயர் சொல்லும்
'அவள்'.

கல்ஹின்னை
ஃபஹ்மி ஹலீம்தீன்

# ஹைக்கூ

1. மறுக்கப்பட்ட காசோலை
திரும்பி வருகிறது
ஏமாற்றம்.

2. மூடிய கதவு
அசைந்து செல்கின்றது
மரவட்டை

3. உதிர்ந்த பூக்கள்
அள்ளியெடுக்கப் பறக்கின்றது
தும்பி

4. காலைச் சூரியன்
கரத்தினில் சூடாக
தேநீர்க் கோப்பை

5. மழைத் துளிகள்
சேற்றில் குதிக்கும்
சிறுவர்கள்

6. பழுத்த பழங்கள்
மரத்தை மொய்க்கும்
ஊரார் கண்கள்

7. அமாவாசை இரவு
நிலாக் காய்கிறது
மகளின் கைவண்ணம்

8. பாடசாலை மணியடிக்க
ஆரம்பமாகின்றது
காற்றின் சலசலப்பு

9. பசுமையான புல்வெளி
கரடுமுரடாய்த் தெரியும்
தோட்டக்காரன் கரங்கள்

10. தொலைந்த பந்து
உருண்டோடுகின்றது
சிறுமியின் கண்ணீர்

11. குரைக்கின்ற நாய்
எட்டிப் பார்க்கின்றது
அச்சம்

12. பூந்தோட்டம்
காணச் சகிக்கவில்லை
காதலர் நடமாட்டம்

மக்கொனையூராள்

# எப்படி கிடைக்கும் இறைவனின் உதவி?

படைப்பினங்களில் உயர் படைப் பாக உன்னை படைத்தும் ஆறறிவு ஜீவனாக உன்னை அமைத்தும் படைத்தவன் அவனை எண்ணிப் பார்க்க நேரமில்லா உனக்கு

எப்படி கிடைக்கும் இறைவனின் உதவி?

காரிருள் சூழ்ந்த கருவறை அதிலேயே பல இருள்களின் உள்ளே திசை தெரியாது நீ இடம் மாறி தவித்த வேளை, தொப்புள் கொடி வழியே ஊண் அளித்து உன்னை பக்குவமாய் காத்த காவலன் அவனின் பேரன்பில் உள்ளம் நிளைக்காத உனக்கு

எப்படி கிடைக்கும் இறைவனின் உதவி?

கல்லையும் மண்ணையும் வணங்கும் பல கோடி மக்களிலே ஏகன் அவனை வணங்கும் பாக்கிய முள்ள ஒருவனாய் உன்னை அமைத்த மகத்தான இரக்கம் உள்ள அவனை சிரம்பணிய நேர மில்லா உனக்கு

எப்படி கிடைக்கும் இறைவனின் உதவி?

எண்ணிப் பார்த்தாலும் குறை காண முடியா நிறைவான படைப்பாய் உன்னை உருவாக்கி பாதுகாப்பாக இவ்வுலகை காணும் வழியை இலகு வாக்கித் தந்த கொடையாளன் அவனின் பெருங்கொடையை வியக்காத உனக்கு

எப்படி கிடைக்கும் இறைவனின் உதவி?

வாய் திறந்து கேட்கத் தெரியாது, அழுகையே மொழியென கொண்டு பசிக்கும் பொழுதெல்லாம் அழுத உனக்கு தாயவளின் மார்பினிலே உனக்கான உணவை சுரக்கச் செய்த, தாயிலும் இரக்கம் உள்ள அன்பாளன் அவனின் அன்பை எண்ணி உள்ளம் கலங்கா உனக்கு

எப்படி கிடைக்கும் இறைவனின் உதவி?

வளர்த்தெடுக்க அன்பான தாயை யும், வழிகாட்ட பண்பான தந்தை யையும் தந்து சீரான பாதையில் உன் வாழ்வை நேராக நகரச்செய்த அந்த இறைவனின் பாதையை விட்டும் நீ திசை மாறிப் போனால்

எப்படி கிடைக்கும் இறைவனின் உதவி?

சரி, பிழை இதுவென பிரித்தறியும் வாலிப பருவம் அதில் உன்னை செவ்வையாக்கிய பொறுப்பாளன் அவனின் நினைவில் திளைக்க வேண்டிய உன் மனம் மாய உலகின் அற்ப சுகங்களில் தொலைந்து போன பிறகு

எப்படி கிடைக்கும் இறைவனின் உதவி?

கருவறையில் உருவான நாள் முதல் கல்லறை சென்றடையும் நொடி வரை அவனின் அத்துணை அருட்கொடை களையும் அனுபவித்துக் கொண்டு அவனை மறந்து நன்றி கெட்டவனாக வாழ்ந்து மறையும் உனக்கு

எப்படி கிடைக்கும் இறைவனின் உதவி?

**சப்தர் முஜாஹித்கான் வஹாப்தீன்**
ஒலுவில்

# சொல்லோவியம்

மாலை நேரத்திலே அகன்ற வானத்திலே வெண்ணிலா, பாலைப் பொழிவது போல, ஒளியைப் பொழிந்து கொண்டிருக்கிறது. நிலவைப் பருகுவது போன்று ஆம்பல் மலர்கள்

மலர்ந்து மகிழ்கின்றன. ஆனால் அதே குளத்தில் இருக்கும் தாமரைப் பூக்கள், தம் இயல்புப்படி மாலை நேரமானவுடன் மடல்களைக் குவித்து மூடிக்கொள்கின்றன.

இது,நிலவைக் கண்டு முகம் சுளிக்கும் காட்சி போல ‘தோலா மொழித் தேவருக்கு‘ தோன்றுகிறது.

அப்போது அவர் உள்ளத்திலே உலகியல் உண்மையொன்று உதிக்கிறது. உலகத்திலே, நல்லோரைக் கண்டு மகிழ்பவர்களும் இருக்கிறார்கள். அந்நல்லவரைக் கண்டு முகம் கடுக்கிறவர்களும் இருக்கிறார்கள்.


எல்லோருக்கும் ஒருமிக்க நல்லவராக இருப்பவர் உலகத்தில் இலர் என்னும் உண்மை அவர் கருத்தில் தோன்றுகிறது. அக்கருத்தை அவர் சொல்லோவியமாகத் தீட்டுகிறார்.

அங்கொளி விசும்பிற் றோன்றும்
அந்திவான் அகட்டுக் கொண்ட
திங்களங் குழவிப் பால்வாய்த்
தீங்கதிர் அமுதம் மாந்தித்
தங்கொளி விரிந்த ஆம்பல்
தாமரை குவிந்த ஆங்கே
எங்குளார் உலகில் யார்க்கும்
ஒருவராய் இனிய நீரார்‘

உலகியல் உண்மை ஒன்றையும் இயற்கைக் காட்சி ஒன்றையும் அமைத்து இலக்கியக் கலைஞன் அழகும், இனிமையும், உண்மையும் தோன்ற அமைத்த இச்சொல்லோவியத்தைப் போன்று சிற்பக் கலைஞனும், ஓவியக் கலைஞனும் சிற்பமும் ஓவியமும் அமைத்துக் காட்ட முடியாது. அவர்கள் ஆகாயத்திலே வெண்ணிலா இருப்பதையும், குளத்திலே ஆம்பல் மலர்ந்து தாமரை கூம்புவதையும் அழகாகக் காட்ட முடியும்.

ஆனால், ‘எங்குளார் உலகில் யார்க்கும் ஒருவராய் இனிய நீரார்‘ என்னும் உண்மையை எவ்வாறு காட்ட முடியும்? இவ்வாறு காட்டுவது இலக்கியக் கலைஞராலே தான் முடியும்.

கவிஞர் சாரா



# டியூசன் அலப்பறைகள்

வீட்டுல சும்மா தானே இருக்கம். பொழுது போகட்டுமே எண்டு சொல்லி நாலு புள்ளயளுக்கு டியூசன் ஆரம்பிச்சன்.

அந்த நாலு புள்ளயளும் நம்மள 'டீச்சர்.. டீச்சர்...' எண்டு கூப்புடக்குள்ள அப்பிடியே மனசுக்குள்ள பட்டாம்பூச்சி பறக்குற ஃபீலிங்கு

ஆரம்பத்தில் நல்லாத்தான் போயிட்டு இருந்துச்சு. போகப் போக டியூசனும் பெருசா போய்ட்டு. ஏகப்பட்ட ஸ்டூடண்ட்ஸ் நம்மள நம்பி. முடிஞ்ச வரைக்கும் நானும் ஏதோ என்னால முடிஞ்சது செஞ்சன்.

ஆனாலும் சில டைம்ல இந்த டியூசன்ல நடக்கிற சம்பவங்கள் தலைய பிச்சுட்டு ஓட வைக்கும்.

அப்படியாக நடந்த இன்றைய சம்பவங்களின் தொகுப்பு ...

தரம் நான்கு சுற்றாடல்

தலைப்பு ...
உணவு பழுதடையாமல் இருக்க குளிர்சாதன பெட்டியை உபயோகித்தல்.

நான் : உணவு பழுதடையாமல் இருக்க என்ன செய்யணும்?

மாணவி : டீச்சர். கடையில சாப்பாடு வாங்கும் போது நிறைய வாங்காம அளவா வாங்கணும்.

நான் : இல்ல மன, நான் கேட்டது விளங்கல போல. இப்ப நம்மட வீட்ட சாப்பாட வாங்கிட்டம். இல்லாட்டி நம்ம சாப்பாடு ஆக்கிட்டம். அந்த சாப்பாடு மிச்சப்பட்டுட்டு. இப்ப அந்த சாப்பாடு சும்மா வெளியில இருந்தா பழுதாகிடும் தானே. அப்பிடி பழுதாகாம இருக்கிறன்டா நாம என்ன செய்யணும்?

மாணவன் : டீச்சர் நான் சொல்றன். டீச்சர்...

நான்: அந்தா அவனுக்குத்தான் கேள்வி விளங்கி இருக்கு. எங்க சொல்லு பார்ப்பம்.

அவனேதான் : மிச்சப்பட்டாத்தானே டீச்சர் பிரச்சினை. நாம மிச்சம் வைக்காம எல்லாத்தயும் தின்னனும் டீச்சர்.

நான் : அட ஆண்டவா! அப்ப இந்த பிரிட்ஜ் எல்லாம் என்னத்துக்குடா பாவிக்கிற?

மாணவன் : அது ஐஸ்தண்ணி குடிக்கிறதுக்கு டீச்சர்.

நான் : சரி அத விடுவம். அதுக்கு பிறகு வாரன்.

அடுத்த தலைப்பு...

உணவு பழுதடையாமல் இருக்க உலர்த்துதல் / உப்பிலிடல்.

நான் : இப்ப ஆத்துக்கு போன உங்கட வாப்பா நிறைய மீன்பிடிச்சிட்டு வந்துட்டாரு. உம்மா கொஞ்சத்த கறியாக்குவா. கொஞ்சத்த பொரிப்பா. மிச்சத்தை என்ன செய்வா.

மாணவன் : அவ்வளவு நிறைய மீன் இப்ப எங்க டீச்சர் பிடிபடுது?

நான் : சரிடா பிடிபட்டுட்டு எண்டு வெச்சிக் கொள்ளுவம். மீன் மிச்சப்பட்டா உம்மா என்னடா செய்வா?

மாணவி : டீச்சர் நாங்க பக்கத்து வீட்டுக்காராக்களுக்கு குடுப்பம்.
நான் : அப்பயும் மிச்சப்பட்டா?

மாணவன்: உங்களுக்கு கொண்டு வந்து தருவம் டீச்சர்.

அடுத்த தலைப்பு...

உணவு பழுதடையாமல் இருக்க மண்ணில் புதைத்து வைத்தல்.

நான் : சரி இப்ப உங்கட வீட்ட நிறைய தேசிக்கா இருக்கு. வைக்கிறத்துக்கு பிரிட்ஜ் உம் இல்லை. சும்மா வெளியில வெச்சா என்ன ஆகும்.

மாணவன் : பழுதாப் போய்டும் டீச்சர்.

நான் : ஆஹ்.... சும்மா வெச்சா பழுதாகும்தானே அப்ப என்ன செய்யலாம்?

மாணவி : எங்கட உம்மா ஊறுகாய் போடுவா டீச்சர்.

நான் : வெரிகுட்.... இப்பதான்டா விசயத்துக்கு வாரிங்க. அப்ப இஞ்சிக்கிழங்கு நிறைய இருக்கு எண்டு வெச்சிக்க. பிரிட்ஜ் உம் இல்லை சரியா?
இப்ப என்ன செய்யலாம்?

மாணவி : டீச்சர் இஞ்சிக்கிழங்குலயும் ஊறுகாய் போட முடியுமா?

நான் : அது வந்து.......



*மாணவன் : (அந்தப் புள்ளயப் பார்த்து) என்ன புள்ள மடத்தனமா கதைக்காய்.*

*டீச்சர்தான் குறுக்கால கதைக்கா எண்டு பார்த்தா உனக்கும் ஒண்டும் விளங்குறல்லயா?*

*நான் : என்னடா திடீரெண்டு சூடாகிட்டாய்?*

*மாணவன் : அப்புறம் என்ன டீச்சர்? இஞ்சிக்கிழங்கு விக்கிற விலைக்கி எங்க டீச்சர் அவ்ளோ வாங்குற? நூறுரூபாய்க்கி வாங்கினாத்தான் ஒரு நாலுகிளாஸ் தேத்தண்ணி ஊத்தலாம்*

*மை மைண்ட் வாய்ஸ்...*
*நம்மள விட தெளிவா இருக்கானுகளே!*

*இவனுகள எல்லாம் வச்சிக்கிட்டு என்னண்டுதான் இந்த பாடத்தை முடிக்கப் போறனோ?*

*ஸ்டூடன்ஸ் : டீச்சர் வேற ஏதாச்சும் கேள்வி இருக்கா?*

*நான் : ரெண்டு நாளைக்கு எல்லாருக்கும் டியூசன் லீவு. அல்லாஹ்ட காவல் போயிட்டு வாங்க.*

**பரீனா பின்த் இஷ்ஹாக்**
*(நிலாத்தோழி)*

# பருவமங்கை

கொச்சி மஞ்சள் பூசிய
செஞ்சரணப் பாதங்கள்
கோவைக்கனி ஊறிய
மதுரமான அதரம்
மரிக்கொழுந்தும் மாம்பூவும் குடியேறி
வாசம் விரவும் கருநிறக் கூந்தல்
தடாகத்து பஞ்சலை கெண்டை துள்ளும்
அஞ்சனம் தோய்ந்த கடைவிழிகள்
பட்டைத் தீட்டிய வைரமாய் பளிச்சிடும்
வெண் நெற்றியில் செவ்வானத்தை
தூரிகையால் தொட்டுவைத்த பொட்டு

மாமத குஞ்சரவிணைக்
கோடுகளாய் அசையும்
மனங்கவர் கனதனங்கள்
இருசெவிகளில் ஊசலாடும்
குன்றின்மணிக் குழைகள்
வஞ்சிமருங்கு சிற்றிடையில்
அணிந்த பூம்பட்டுச் சேலை...
நெஞ்சில் அலையெழும்பும்
நீலநிறக் கல்பதித்த சிறுபொன்மாலை
முற்றிய நெற்பயிர் நுனி
தலைசாய்த்தாற் போல
நாணத்தில் கவிழ்ந்த முகம்
பார்க்கப் பார்க்க பரவசமூட்டும்
பஞ்சவர்ணக்கிளியாய் பருவமங்கை!

கவிஞர் சாரா

# 80s/ 90s கிட்ஸ் பற்றியதோர் அலசல்

*1985 - 1995 களில் பிறந்தவர்கள் வருங்காலத்துக்கும், கடந்த காலத் துக்கும் இடையே பாலமாக விளங்கு கின்றார்கள். பழையதை விட முடியாமலும், புதியதை பிடித்துக் கொள்ள வேண்டிய கட்டாயத் துக்கும் உள்ளாக்கப் படுகிறவர்கள் இவர்களே. 1985 -1995 களில் பிறந்தவர் களைப் பற்றி மேலே எழுதியிருப்பது கொஞ்சம்தான். இன்னும் நிறைய எழுதலாம்.*

*1985 -1995 களில் பிறந்தவர்களுக்கு என சில சிறப்புகள் இருக்கின்றன. சில விஷயங்களில் இவர்கள் கொடுத்து வைத்தவர்கள், சில விஷயங்களில் கொடுத்து வைக்காதவர்கள். அவர் களைப் பற்றிய ஒரு ஜாலி அலசல்.*

*1985 -1995 களில் பிறந்தவர்களும், கணினி & இணையமும்*

*இணையத்தையே இன்று இயக்கு வது இவர்கள்தான், ஆனாலும் அன்று பழைய கம்ப்யூட்டரின் மொனிட் டரைப் பார்த்து, 'அதெல்லாம் பணக் காரன் வீட்டுல இருக்கிறதுப்பா!' என்று வருந்தியவர்கள் ஆனால் இன்று, அதே ஆப்பிள் இன் ஐஃபோனில் 'டிஸ்ப்ளே சுமார்பா' என்று அலுத்துக் கொள்பவர்கள்.*

*மைக்ரோசொஃப்ட் பெயின்ட்டில் பென்சில் டூல் மூலம் மவுஸால் தன்பெயரை கிறுக்கி, உலகின் முதல் டிஜிட்டல் கையெழுத்தைப் போட்ட வர்க்கத்தினர்.*

*மைக்ரோசொஃப்ட் வேர்டு மென் பொருளில் தன் பெயரை* WordArt *மூலம் 3Dயில் பார்த்து பெருமிதம் அடைந்தவர்கள்.*

*ஜீ மெயில், யாஹு மெயில் ஆகியவற்றில் மெயில் அனுப்பிய முதல்நாளே, வீட்டுக்கு வந்த தபால் காரரிடன் 'இன்னும் எத்தனை நாளைக்கு லெட்டர்லாம் அனுப்பிக் கிட்டு இருப்பாங்களோ?!' என அலுத்துக்கொண்டவர்கள்.*

*நொக்கியா ஃபோனில் பாம்பு கேம்களை விளையாடிவிட்டு, விடுமுறை நாட்களை தெருவில் கழிக்காமல், வீட்டிலுள்ளேயே கழித்த முதல் தலை முறையினர்.*

*கூகுளின் வளர்ச்சியை அருகில் இருந்து பார்த்தவர்கள்.*

*ட்விட்டரை இன்றும் முழுமை யாக புரிந்துகொள்ள முடியாதவர்கள்.*

*இணையத்தில் லைவ் ஸ்ட்ரீம் மூலம் டிவி சேனல்களைப் பார்த்து, 'நான்லாம் நெட்லயே டிவி பார்ப்பேனே!' என்று சொன்னவர்கள்.*

*மொத்தத்தில் 1985 -1995 களில் பிறந்தவர்கள். இன்றைய இணை யத்தின் குழந்தைகள்!*

*1985 -1995 களில் பிறந்தவர்களும், டிவியும்.*

WWW-ஐப் பார்த்துவிட்டு பக்கத்து வீட்டு குட்டிப் பயலை ஸ்டைலாக தூக்கிப்போட்டு ரவுடியான கடைசி தலைமுறை.

பழைய விஜய் டிவியை பார்த்த வர்கள். வீடியோ டேப்பாக இருக்கும் தன் பெற்றோரின் திருமண வீடியோவை சிடியாக மாற்றித் தந்தவர்கள்.

கம்பி கம்பியாக இருக்கும் பழைய ஆன்டெனாவை வீட்டு கூரையில் ஏறி அட்ஜஸ்ட் செய்யத் தெரிந்த கடைசி மனிதர்கள்.




பக்கத்து வீட்டின் கேபிள் கனெக்ஷ னில் நம் டிவிக்கு திருட்டு கனெக்ஷன் கொடுத்து த்ரில் அனுபவித்தவர்கள், ஃப்ளாட் ஸ்க்ரீன் டிவியைப் பார்த்து வாய் பிளந்த கடைசி தலைமுறையினர்.

ஞாயிற்றுக்கிழமையானால் சக்திமான் பார்க்கவேண்டும் என்று 12 மணிக்கு முன், டிவி முன்னால் ஆஜரானவர்கள். அதே சக்திமான் சீரியலுக்கு முன்னால், ராமாயண மும், மகாபாரதமும் ஓடும் என்றா லும் அப்போது டிவி பக்கமே எட்டிப் பார்க்காதவர்கள்.

சூரியன் fm, சக்தி fm களுக்கு தன் பெயருடன் காதலியின் பெயரை SMS அனுப்பி, அதை ரேடியோவில் கேட்கும்போது உலகமே தன்னை ஆசிர்வதித்ததாக உணர்ந்த முதல் தலைமுறையினர்.

1985 -1995 களில் பிறந்தவர்களும், காதலும்.

16 வயசில் தோன்றும் Attraction ஐ காதல் என நினைத்துக்கொண்டு கற்பனையிலேயே குடும்பம் நடத்திய புண்ணியவான்கள்.

காதல் கடிதங்களை காதலியின் கொப்பிக்குள் அவளுக்குத் தெரியா மல் வைத்துவிட்டு அவளின் Reaction என்ன என்று கிளாஸில் இருந்தபடியே நோட்டம் விட்ட கடைசி தலைமுறையினர் (வரலாறு முக்கியம் அமைச்சரே!)

ஃபோன் நம்பரை பகிர்ந்து கொள்வதன் மூலமும் காதலைத் துவக்க முடியும் என்று நம்பிய முதல் தலைமுறையினர்.

காதலர்களாக இருந்தாலும் பேருந்தில் கூட ஒன்றாக அமர்ந்து செல்ல தயங்கிய கடைசி தலைமுறையினர்.

காதல் தோல்வி என்றாலே தாடி வளர்க்கனும் என்று நினைத்த கடைசி தலைமுறையினர்.

'நாங்கள் காதலிக்கிறோம்' என்பதைக்கூட நேரில் சொல்லாமல் In a relationship என்று பட்டும்படாமல் சொல்லி அதிலே புளகாங்கிதம் அடைந்தவர்கள்.

சாதி, மதம், இனம் மூலம் காதல்கள் பிரிக்கப்படும் கடைசி தலைமுறை இவர்கள்.

நட்பையும் காதலையும் உடலுறவையும் ஒன்றோடு ஒன்று குழப்பிக் கொள்ளும் கடைசி தலைமுறையாக இருந்தாலும், தேவைப்படும்போது காதலை நட்பாக மாற்றிக்கொள்ளும் திறன் படைத்த கில்லாடி தலைமுறையினர்.

மேலே உள்ள பாயின்ட்டுகளைப் படிக்கும்போது உங்களுக்கு உங்களையே பார்ப்பதுபோல் தோன்றினால், நீங்களும் இதே தலைமுறையினர் தான்!

**சுபாஷினி சுந்தரலிங்கம்**

# ஹைக்கூ

**வயிறு நிறைகிறது**
**கொஞ்சூண்டு கிள்ளிக் கொடுக்கும்**
**மகள் ஊட்டும் உணவு**

**சருகுகளை புதைத்த**
**இடத்தில் துளிர்க்கும்**
**அதே செடி**

**இறைக்க இறைக்க**
**கிணற்றில் அதே**
**இடத்தில் வானம்**

**அம்மா வீட்டிற்கு**
**வரும்வரை எரியும்**
**குழந்தைக்கு பசி**

**பாட்டிக்காக வீடு கட்ட ஆரம்பித்தேன்**
**முடிக்கும்போது உலராமல்**
**ஈரமண்ணுடன் பாட்டி சமாதி**

**வெயில் குளம்**
**பயங்காட்டியபடி நடக்கும்**
**சிறுவனின் நிழல் தவளை**

**தாத்தாவின் முகத்தை**
**மட்டும் விட்டு வைத்திருக்கிறது**
**சுவற்றில் செல்லரித்த புகைப்படம்**

**ஷர்ஜிலா பர்வீன் யாகூப்**
**கம்பம்**

# உங்கள் உடல் எடையைக் குறைக்க உபயோகமான தகவல்கள்

எடையைக் குறைப்பது என்பது எளிதான ஒன்றுதான். ஆனாலும் நிரந்தரமான எடை இழப்பு என்பது மிகவும் கடினமான ஒன்று.சில எடை இழப்பு முறைகள் தற்காலிகமானவை.

அவற்றை செய்து முடித்து எடை குறைந்ததும் நாம் மறந்து விடுகிறோம். நிரந்தரமாக நமது எடையை சீராக வைப்பதற்கு நீங்கள் தினசரி ஆரோக்கிய மான பழக்க வழக்கங்களை கடைப்பிடிக்க வேண்டும். இந்த முறைகளை வாழ்வில் ஒவ்வொரு நாளும் கடைப்பிடித்து வரும்போது நிரந்தரமான எடை இழப்பை நீங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

இவ்வாறான முயற்சிகளை நிரந் தரமாக வாழ்வில் ஒரு பகுதியாக கைக்கொள்ளும் போது நீங்கள் எதிர் பார்க்கும் பலன் நிச்சயமாக உங்களை வந்தடையும். எடை இழப்பிற்கான நிரந்தரமான மற்றும் பயனுள்ள பத்து முறைகளை நாம் இங்கே காணலாம். இதை தினமும் ஒரு வழக்கமாக தினசரி அனுஷ்டித்து வந்தால் ஆரோக்கியமான மற்றும் கட்டுக்கோப்பான உடலை நீங்கள் பெற்றுக் கொள்ள முடியும். எனவே இவ்வாறான முயற்சிகளை வாழ்க்கையில் தொடராக விடாமல் செய்து வருவதற்கு உறுதி கொள்ளுங்கள்.

1) தினமும் உடற்பயிற்சி செய்தல்

இதற்காக நீங்கள் 30 தொடக்கம் 60 நிமிடங்களை செலவிட முடியும். ஒரே நேரத்தில் செய்ய முடியவில்லை என்றால் ஒரே நாளில் ஒவ்வொரு நேரங்களில் அவற்றை பிரித்து செய்து கொள்ளலாம். உதாரணமாக நீங்கள் 30 நிமிடங்களை ஒவ்வொரு நாளும் செய்யப் போகிறீர்கள் என்றால் பத்து நிமிட அமர்வுகளாக மூன்று முறை உடற்பயிற்சியை மேற்கொள்ள முடியும்.

2)ஆரோக்கியமான பழங்கள் காய்கறிகளை உணவில் எடுத்துக் கொள்ளுதல்.

ஆரோக்கியமான காலை வேளை யை நீங்கள் தொடங்குவதற்கு தானியங் களுடன் உங்கள் சூழலில் கிடைக்கக் கூடிய பழங்களையும் காய்கறி களையும் சேர்த்துக் கொள்ளுங்கள்.

கீரை, குடைமிளகாய், வெள்ளரி, தக்காளி,வெங்காயம், வாழைப்பழங் கள் போன்றவற்றை காலை ஆகாரத் திற்காக சேர்த்துக் கொள்ளும் போது உடலில் மேல் அதிக கொழுப்பு சேர்வது தடுக்கப்பட்டு சமிபாடும் இலகுவாக அமைகிறது.

3)வேளை உணவுகளைத் தவிர்ப் பதை விட்டு விடுங்கள்

உண்பதைத் தவிர்த்து பட்டினி கிடக்காதீர்கள். பட்டினி கிடக்கும் போது பசியின் தன்மை அதிகரிப்பதோடு அடுத்த வேளை உண்ணும் உணவின் அளவிலும் அதிகரிப்பு ஏற்படுகிறது. எனவே வழமைக்கு மாறாக அதிக உணவு உட்கொள்ளும் வாய்ப்பு ஏற்படும். ஆரோக்கியமானதும் கட்டுப்படுத்தப் பட்டதுமான மூன்று வேளை உணவுகளை உண்ணுங்கள்.

உயர் கொழுப்பு அதிக கலோரிகள் உள்ள உணவுகளை பெரும்பாலும் தவிர்த்துக் கொள்ளுங்கள். இவ்வா றான உணவுகளை வாங்காமல் இருப்பதே நல்லது.

4)சுறுசுறுப்பாக இருப்பதை மறக் காதீர்கள்.

சுறுசுறுப்பாக இருப்பது ஆரோக் கியத்தை மேம்படுத்துகிறது. சுறுசுறுப் பாக இருப்பது எடை இழப்பை ஊக்குவிப்பதோடு மற்றும் உடலை சீராக ஒரே மாதிரியாக பராமரிக்கும் ஒரு காரணியாகும். நீங்கள் எடுக்கும் எந்த வேலையையும் சுறுசுறுப்பாகவும் உற்சாகத்துடன் செய்யும்போது வாழ் வில் ஒரு பிடிப்பை ஏற்படச் செய்து விடுவதை காணலாம்.

5)மன அழுத்தத்தை குறைத்துக் கொள்ளுங்கள்.

மன அழுத்தத்தினால் நீங்கள் சாப்பிடும் அளவு அதிகரிக்கிறது. இத னால் உடல் எடை அதிகரிக்கிறது. எனவே மன அழுத்தத்தில் இருந்து விலகியே இருங்கள். மன அழுத்தத்தில் இருந்து வெளியே வருவதற்கு நீங்கள் பல்வேறு உத்திகளை கைக்கொள்ளலாம். உங்கள் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நண்பர்கள் உடன் சேர்ந்து தசை தளர்வு நுட்பங் கள், நன்றாக சிரித்து மகிழ்தல், உடற்பயிற்சிகள், ஆழ்ந்த சுவாசம் போன்றவற்றை மேற்கொள்ளும் போது மன அழுத்தத்தில் இருந்து நீங்கள் நிவாரணம் பெறலாம்.

6)வீட்டிலேயே சமைத்து சாப்பிடுதல்

உணவகங்கள், சிற்றுண்டிக் கடைகளில் சாப்பிடுவதைத் தவிர்த்துக் கொள்ளுதல் எடை இழப்பிற்கு மிகவும் இலகுவாக இருக்கும்.

தற்காலத்தில் இதை தவிர்த்துக் கொள்வது மிகவும் கடினமான ஒன்றாக இருக்கிறது. எனினும் நிரந்தரமான எடை இழப்பிற்கு இவ்வாறான துரித உணவகங்களுக்கு செல்வதை தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும். வீட்டிலேயே சாப்பிடப் பழகுங்கள். வீட்டிலேயே ஆரோக்கியமான மற்றும் சுவையான கட்டுப்பாடான ஆகாரங்களைத் தயா ரித்து உண்ணுங்கள். இவ்வாறு முயற்சி செய்யும்போது உங்கள் உடலைக் கட்டுக்கோப்பாக வைத்துக் கொள்ள முடியும். பராமரிக்க முடியும். நீங்கள் வெளியே சாப்பிட நேர்ந்தால் கலோரி எண்ணிக்கையை மறக்க வேண்டாம். இது மிகவும் பயனுள்ள முறையில் எடை இழப்பதற்கான வழிமுறையாகும்.

7) நடைப்பயிற்சி

தினசரி நடை பயிற்சியை உங்கள் வாழ்க்கையில் மேற்கொள்ளுதல் அத்தியாவசியமான ஒன்றாகும். ஆரோக்கியத்திற்கும் உடல் எடை

இழப்பிற்கும் உகந்ததாக அமையும். உங்கள் சாப்பாட்டு வேளையின் பின்னர் தினமும் பத்து நிமிடங்கள் நடைப் பயிற்சியில் ஈடுபடுதல் மிகவும் நல்லது. ஒரு மணித்தியாலம் அளவு காலை நடை பயிற்சி மிகவும் பயன்படக் கூடியது இதனை மேற்கொள்ள முடியாத வேளைகளில் மூன்று அல்லது இரண்டு தடவைகளாக உடைத்தும் மேற்கொள்ள முடியும். "Walking is best medicine for human" என்றார் ஹிப்போக்கிரட்டீஸ். உச்சி முதல் பாதம் வரையிலான ஒட்டுமொத்த உடலுக்கும் ஒரே நேரத்தில் பயிற்சி கொடுக்க முடியும் என்றால் அது நடை பயிற்சியால் மட்டுமே சாத்தியம். செலவில்லாத சிரமம் இல்லாத நடைப்பயிற்சியை யார் வேண்டுமானாலும் செய்யலாம்.

ஆனாலும் உடல் பருமனடைந்தவர்களும் நீரிழிவு நோயாளர்களும் கொலஸ்ட்ரால் கூடியவர்களும் மாத்திரமே நடைப்பயிற்சி செய்ய வேண்டும் என்று நினைப்பவர்களே நம்மில் அதிகமாக உள்ளனர். அது தவறு என்று அனைவரும் உணர வேண்டும். நடைப்பயிற்சியை நாம் அனைவரும் நாளாந்தம் மேற்கொள்ளும் போது நிச்சயமாக ஒரு சீரான எடை இழப்போடு ஆரோக்கியத்தையும் நாம் பெற்றுக் கொள்ள முடியும்.

*8)கட்டுப்பாடான உணவு உட்கொள்ளுதல்*

கட்டுப்பாடான உணவை உட்கொள்ளுதல் மிகவும் சிரமமான விடயம் என்றாலும் அதனை முயற்சி செய்து பார்த்தால் வெற்றி அதிகபட்சம் என்றே நினேக்கிறேன். சாப்பிடும் உணவு வகைகளில் அதிகம் கவனம் செலுத்தி கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வாருங்கள்.

அதாவது உங்கள் உணவில் மாப் பொருளையும் கொழுப்பையும் தவிர்த்துக் கொள்ளுதல் அல்லது குறைத்துக் கொள்ளுதல் மிகவும் நல்லது. புரத வகையான உணவுகளை அதிகம் உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள். குறைந்த அளவில் சாப்பிடுங்கள் பசி எடுத்த பின்னரே சாப்பிடுங்கள். இதுவும் எடை இழப்பிற்கு மிகவும் உபயோகமான ஒரு தகவலாகும்.

*9)தினமும் உங்கள் உடல் எடையை கண்காணியுங்கள்*

உடல் நிறையை ஒவ்வொரு நாளும் கண்காணித்து வருவது மனதளவில் உங்களுக்கு ஒரு ஊக்கத்தை வழங்கும். இதனால் உங்கள் முயற்சிகள் நன்கு பயனளிக்கின்றனவா இல்லையா என்பதை நீங்கள் அறிந்து கொள்ள உதவும். உங்கள் எடை மாற்றத்தை கண்டுபிடித்து அதற்கேற்ப உங்கள் முயற்சிகளை மாற்றி அமைப்பதற்கு இது உதவி செய்யும். இரண்டு நாட்களுக்கு ஒரு முறை உங்கள் எடையை கண் காணித்துக் கையேட்டில் குறித்து வைத்தால் சீரான எடையிழப்பு நடை பெறுகிறதா இல்லையா என்று நீங்கள் அறிந்து கொள்ளலாம்.

*10) உங்களை நீங்களே பாராட்டிக் கொள்ளுங்கள்.*


உங்கள் எடை இழப்பு முயற்சி

கள் வெற்றிகரமாக அமையும் போது உங்களை நீங்களே பாராட்டிக் கொள்ளுங்கள் சந்தோசமாக இருங்கள். அதாவது உங்களுக்கு நீங்களே பரிசுகளை தந்து கொள்ளுங்கள். புத்தகங்கள் கைப்பைகள் போன்ற தரமான பிரயோசனமான பரிசுகளை உங்களுக்கு நீங்களே கொடுத்துக் கொள்ளுங்கள். இவ்வாறான வெகுமதிகள் உங்கள் எடையிழப்பு முயற்சிகளை ஊக்குவிக்கும் விதத்தில் உங்களைத் தூண்டுவதோடு மட்டுமல்லாது உங்கள் வாழ்க்கையில் இவ்வாறான முயற்சிகளை நிரந்தரமான ஒரு அங்கமாக மாற்றி விடும். இதற்குப் பின்னர் கூடுதலாக எடை இழப்பை விரும்பும் நபராக, அதை அடைந்த ஒருவராக நீங்கள் மாறி விட்டிருப்பதை காண்பீர்கள். அது உங்கள் வாழ்வில் நீங்கள் அடைந்த ஒரு முக்கிய சாதனையாகக் காண்பீர்கள்.

நன்றி!

Dr **ஜலீலா முஸம்மில்** (MBBS/SL)
ஆதார வைத்தியசாலை, ஏறாவூர்







## புல்லாங்குழலன்

அந்தப் பல்கலைக் கழக வளாகமே மலர்களாலும் தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருக்க அழகு மேடை ஒன்றில் கவர்னர், முதலமைச்சர், அந்தப் பல்கலைக்கழக துணைவேந்தர் மற்றும் அமைச்சர்கள் சிலர், பேராசிரியர்கள் சிலர் என நிறைந்திருந்தது.

அன்று மருத்துவப் படிப்பின் மேல்நிலைப் பட்டப்படிப்புகளுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட இருந்தது. பட்டம் பெற இருந்த மருத்து வர்கள் தர வரிசையில் அமர வைக்கப் பட்டிருந்தனர்.

அதில் முதல் வரிசையின் முன் இருக்கையில் அமர்ந்திருந்த பெண் ணைப் பற்றி தான் எங்கும் பேச்சா யிருந்தது.

பட்டங்களை வழங்க இருந்த கவர்னரும் முதலமைச்சரும் மேடை யில் எழுந்து நிற்க, முதலில் அழைக்கப் பட்ட பெயர் ரகுநந்தினி. அவள் நேரே வந்து மேடையில் பட்டம் வாங்க நின்ற போது அவளை வாழ்த்தி கவர்னரும் முதலமைச்சரும் பெரிதும் புகழ்ந்துரைத்தனர். ரகுநந்தினி ஒரு திருநங்கை என்ற பெருமிதத்தில் நின்றிருந்தாள்.

இங்கு நிற்கும் ரகுநந்தினி மாநிலத்தி லேயே மருத்துவப் படிப்பில் பட்டம் வாங்கியதும் தங்கப் பதக்கம். இப்போது முதுநிலை பட்டப் படிப்பிலும் தங்கப்பதக்கம் பெறுகிறார். என்பது நம் எல்லோருக்கும் பெருமை தருவ தாய் இருக்கிறது. அவரை வாழ்த்துகிறேன். திருநங்கையாய் பல துன்பங்களுக்கிடை யேயும் ஏச்சு பேச்சுகளைப் புறந்

தள்ளியும் இந்த நிலையை அவர் அடைந்திருப்பதற்கு உண்மையிலேயே நான் பெருமைப்படுகிறேன். அவர் மூன்றாம் பாலினம் தான் என்றாலும் உள்ளத்தில் உறுதியானவர் என்பதை அறிந்து மகிழ்கிறேன். என்றார்.

மற்றவர்களும் தங்கள் உரைகளில் அவரைப் பெருமைப்படுத்திப் பேசினர். கடைசியாக நன்றி கூறிய ரகுநந்தினி என்னுடைய இந்தப் பெருமைக்கு உண்மையிலேயே உரியவர் என் தொடக்க கால ஆசிரியை சிந்தாமணி அம்மா அவர்கள் தான். அவர் என்னை கரைசேர்த்ததை மட்டும் இங்கே நடந்தது நடந்தபடி நான் சொல்கிறேன். அனுமதியுங்கள். இதனால் என்னைப் போன்றோர் நன்கு கரைசேர அது பயன்படும். எனக்குக்கிடைத்தது போல் சிந்தாமணி டீச்சர்கள் கிடைக்கவில்லை என்றாலும் என் கதையைக் கேட்டு சிலர் நலம் பெறலாம் என்ற நல்லெண்ணத்தில் இந்த மேடையை நான் பயன்படுத்துவதற்கு என்னை மன்னிக்கவும் என்று தொடங்கினாள் கதையை சிந்தாமணி.

ஆங்கில வழி தனியார் பள்ளி ஒன்றின் எட்டாம் வகுப்புப் பிரிவில் சலசலப்பு. அமைதியைக் கிழித்துக் கொண்டு மாணவ மாணவியரின் பேச்சுக் குரல்கள்.

ரகுவரன் என் பக்கத்தில் வந்து உட்காருகிறானடி.என்றாள் சவிதா.

ஆமாம். அவன் எப்போதும் பெண் கள் கூடத்தான் உட்காருகிறான் என்றாள் சிந்து.

அவன் நடையுடை பாவனைகள் கூட பெண்கள் மாதிரி தான் இருக்கின்றன என்றான் மணியன்.

அப்போது வகுப்பில் ஆசிரியை நுழைந்ததும் பேச்சுகள் நின்றன.

என்ன சத்தம் இங்கே?

ரகுவரன் என் பக்கத்தில் வந்து உட்காருகிறான் டீச்சர் என்றாள் மீண்டும் சவிதா.

ரகுவரன் இங்கே வா என அழைத்தாள் ஆசிரியை. பயந்து கொண்டே அருகில் வந்த ரகுவரன் டீச்சர் எனக்கு பையன்கள்கூட உட்கார வெக்கமாக இருக்கிறது என்றான்.

வகுப்பில் கொல்லென்ற சிரிப்புச் சத்தம்.

அடக்கிய ஆசிரியை அவனை தன் பக்கத்தில் இருந்த ஸ்டூலில் உட்காரச் சொன்னார்..

எல்லோரும் அவரவர் வேலை யைப் பாருங்கள். ரகுவரன் இனி என் பக்கத்தில் தான் உட்காரு வான். இதற்காக யாராவது சண்டையிட்டால் அவர்களுக்கு டி.சி தரப்படும் என்று எச்சரித்தார். வகுப்பில் சத்தம் அடங்கியது.

ரகுவரன் ஆசிரியை சிந்தாமணியை நன்றியுடன் பார்த்தான்.

சிந்தாமணியே அவனை 10ம் வகுப்பு வரை தன் சக ஆசிரியைகளிடம்

# போர்க்களம்

புளியையும் சாம்பலையும் தேய்த்துக்
குழாயில் நீராடி நீர்சொட்ட சொட்டத்
தலைகீழாய் வெயிற் காய்கிறது
அரிசியில்லா வெண்கலப் பானை

கதவைக்கடந்து உள்நுழையும் அணில்
வாசலில் சத்தமிடும் சில பறவைகள்
படிக்குள்ளிருந்து கையை எடுத்ததும்
தூறல்களாய் விழும் உலையரிசிகள்

ஒவ்வொரு பையாய் நீளும் ஆராய்ச்சி
நூறும் ஐம்பதுமாய் ஒன்றிரண்டைத் தர
ஊரின் கடைசியிலுள்ள ஒரு வீட்டில்
அதிர்கிறது ஒலிபெருக்கியில் பாடல்

வரிசையாய் வரும் நிகழ்வுகளுக்கு
மொய் செய்தே முடிந்து போகுமோ?
மழைக்கு ஏங்கும் களர்நிலம் போல்
அனல் கொதிக்கும் இந்த வாழ்க்கை

வெறுமைப் புகைபடிந்த முகத்தின்
ஆழச் சிந்தனையைக் கலைக்கிறது
வெடிப்புற்ற மென்சக்கர ஈருருளியுடன்
பள்ளிமுடிந்து வரும் மகவின் குரல்

மின்திறன் ஏறும் அலைபேசி ஒலிக்க
நனைந்த கைதுடைத்து எடுக்கையில்
சட்டென்று நனைந்தன இரு கண்கள்
தந்தைக்குக் கையெலும்பில் முறிவு

இல்லாமையின் படையெடுப்பில்
கூர்வாளை ஏந்தும் துன்பங்கள்
குருதியின்றிக் குத்திக் கிழிக்க
மனத்தில் நாளொரு போர்க்களம்.

**இதயம் விஜய்**
ஆம்பலாப்பட்டு

*சொல்லி அவனை ஆசிரியைகளின் அருகில் உட்கார்ந்து படிக்க ஏற்பாடு செய்தாள். அப்படியும் சலசலப்புகள் கொஞ்சம் இருக்கத்தான் செய்தது. கேலிகள் கோலி விளையாடின.*

*ப்ளஸ் ஒன் வந்தபோது அவனுடைய அங்கங்களிலும் மாற்றம், குரலும் மென்குரலாயிற்று, நடையும் நளினத்திற்கு மாறிற்று. சிந்தாமணி அவனிடம் இனி நீ பெண்கள் அணியும் ஆடைகள் அணி. உன் பெயரையும் நான் மாற்றி கெசட்டில் அறிவிக்கச் செய்கிறேன் என்றாள். அவன் வீட்டிற்கும் சென்று பெற்றோரிடம் அவன் நிலைமையை நன்கு எடுத்துரைத்தாள்.*

*பெற்றோர் அதிர்ச்சியில் விழுந்தனர்.*

*என்ன டீச்சர் இப்படி சொல்கிறீர்கள்? இப்போது என்ன செய்வது. மானம் போகுமே என்றார்கள்.*

*இது இயற்கையின் படைப்பின் கொடுமை. அதற்காக இதில் உங்கள் மகன் செய்த தவறு ஏதுமில்லையே. அதனால் அவனை மகளாக ஏற்றுக் கொள்ளுங்கள். ஊரார் உறவினரிடம் சில காலம் ஒதுங்கியிருங்கள். நல்லவர்களிடம் நிலைமை எடுத்துச் சொல்லுங்கள் என்று பலவிதமாய் சொல்லி சற்றே மாற்றினாள்.*

*அவன் முழுமையாய் பெண்ணாவதற்கும் ஆபரேஷன் இருக்கின்றது. நல்ல மருத்துவ மனையில் அவனைச் சேர்த்து அதை செய்து விடுங்கள். அவன் வாழ்வும் வளப்படும். மகனை*

மகளாய் நினையுங்கள்.

அரை மனதாய் ஒப்புக் கொண்ட ரகுவரனின் பெற்றோர் சிந்தாமணி சொன்னது போல் தரமான மருத்துவ மனையில் அவனைச் சேர்த்து அந்த ஆபரேஷனையும் முடித்தனர்.

அதற்கு அவன் பட்ட அவஸ்தை களையும் பார்த்த அந்தப் பெற்றோர் கண் கலங்கினர். அவர்கள் மனமும் மாறியது. யார் கேட்டாலும் பதில ளிக்கும் வல்லமையும் அவர்களுக்கு வந்தது.

ப்ளஸ் ஒன் மற்றும் ப்ளஸ் டூ இரண்டிலும்கூட அந்தந்த ஆசிரியை களிடமும் என் நிலை பற்றிக் கூறி அங்கும் எனக்கு எந்தத் துன்பமும் நிகழாமல் பார்த்துக் கொண்டார். என்றாலும் சிலர் பின்னால் பேசு வதை நிறுத்தவில்லை தான். நான் அதற்கெல்லாம் வருத்தப்படுவதை நிறுத்தி விட்டேன். எனக்கும் தோழிகள் கிடைத்தனர்.

ப்ளஸ் டூவில் மாநிலத்தில் முதல் மதிப்பெண் பெற்றதால் எனக்கு மருத்துவப் படிப்பு கட் ஆப்பில் கூடியதால் வெகு எளிதாக டாக்டர் படிப்புக்கான சீட் கிடைத்தது.

சிந்தாமணி டீச்சருக்கு குழந்தை கள் இல்லை என்பதாலும் என்னை அவர் தன் மகளாகக் கருதி அன்பு செலுத்தினார்.

அவ்வப்போது என்னை பார்த்துச் செல்வார்.

என்னை கோழிக்குஞ்சை தாய்க் கோழி எப்படிப் பொத்தி பாது காக்குமோ அப்படி பொத்தி பாதுகாத்த துடன் என் பெற்றோரையும் என்மீது அன்பு கொள்ளச் செய்தனர்.

பள்ளிகளிலும் ஆசிரியைகளிட மும் மாணவ மாணவிகளிடமும் என் நிலைபற்றிக்கூறி என்னைக் காத்தவர். அவர் என்பதால் எனக்கு அவருடைய அறிவுரை கள் பொன் போன்றதாயிருந்தது.

கதையை முடித்த ரகுநந்தினி சிந்தாமணி டீச்சரைப்போல நல்ல உள்ளங்கள் இருந்தால் எங்களைப் போன்ற திருநங்கைகள், திருநம்பிகள் எந்த வகையிலும் துன்பப்பட மாட்டார்கள் என்பது மட்டும் உறுதி. எனவே எங்களைப் போன்றவர்களை இழிவு படுத்தாதீர்கள் என அன்பு டன் இந்த சமயத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். என்னைப் புகழ்ந்துரைத்தவர்கள் மற்றுமுள்ள அனைத்து ஆசிரிய ஆசிரியைகள் மற்றும் தோழ தோழியர் அனைவ ருக்கும் என் நன்றிகள். வணக்கம் என்று கூறிய ரகுநந்தினி தன் அன்புக்குரிய ஆசிரியை சிந்தா மணியை மெதுவாக மேடைக்கு அழைத்து வந்து அவர் கால்களைத் தொட்டு வணங்கினார்.

ரகுநந்தினியை அணைத்து வாழ்த் திய சிந்தாமணியின் கண்கள் கலங்கின. அந்த மேடையே உணர்ச்சிகளில் குளித்தது.

# றோணியோக்களின் வளர்ச்சி-II

அன்றைய றோணியோ யுகமான ஒரு காலம்.பேசும் பொருளாய் பேரின்பமாய் பெருமிதமடையும் காலமது.1980-1990 வரையிலான காலத்தில் மிக மிக வேகமாகவும் காத்திரமாகவும் தமது இலக்கிய பணியை றோணியோக்களின் மூலம் செவ்வனே செய்து வந்தனர் அன்றும் இன்றும் இலக்கியத்தில் மின்னும் இலக்கிய வாதிகள்.

அவ்வாறான இலக்கிய வாதிகளில் ஒருவரால் வெளியிடப்பட்ட ‘கலை இதழ் என்ற றோணியோவும் ஒன்றாகும்.








இது விருத்தோடை கலை இலக்கிய வட்டத்தின் காலாண்டிதழாக வெளிவந்துள்ளது.

விருதோடை முஸஃபிரை ஆசிரியராகவும். ,னி.னி.மர்லின்(புரட்சிமகன்) அவர்களை துணை ஆசிரியராகவும் உதவிகள்:. ஃபாரா தாஹிர், விஷேட ரசனைகள்-கவிஞர்-புரட்சிக்கமால் (நிலாவாசன்) ஓவியம்+அமைப்பு சபானா. னி.ஸமது அட்டைப்படம். கலைவாதி





கலீல் ஆகியோரால் உருவான இவ்விதழ் மிகவும் தெளிவாகவும் அழகாகவும்அமைந்துள்ளது எழுத்து.

இனி வாருங்கள் இதழினை நோக்குவோம்...

வாசகர் கவனத்துக்கு!

ஆசிரியர், "உலக தத்துவம்" செல்வி.பாத்திமா அம்மான், "சிரிப்போமா?" ஸிபானா. னி.ஸமது, "சிந்தனை சிதறல்கள்" புரட்சிமகன், பேட்டி மலரிதயன் மஃசூர் பேட்டி கண்டவர் : புரட்சிப் புனிதன்,. " இருட்டறைச் சட்டங்கள்" ரிஸானா ஹாசீம் , "ஜோக்" ஸபீனாஸ்& காஸிம் புத்தளம் , "குட்டிக்கதை -மறைக்கப்படும் உண்மைகள்" திக்குவல்லை ஸப்வான் , "நிம்மதியை ஈந்துவிடு" பரீதா ஏ.றஹூமான், "வாழ்க்கை" கல்லொளுவை பாரிஸ்,. "பாதிப்பு" ஏ.ஜே.ஸாஹிரா. மினுவாங்கொட,. "கலைஇதழ்" நிஸா முகம்மத்,. "புறப்படுபுறப்படு" கவிஞர் நிலாவாசன்,. "முன்னேற்றம்" றிஸ்லான் காலீத்,. "ஏமாற்றம்" புரட்சிப்புனிதன்,. எமது மணிக்கதை, "நகைச்சுவை" ஸபானா, வாசகர் நெஞ்சம்...., "அட்டகாசம்" ஃபாராதாஹிர் ,. "துரோகம்" இர்பானா ஜெப்பார், "அகதிகள் முகாமில் ஒரு மிஃராஜ்" கலைச்சிற்பி ,. "நண்பனே கவனமாயிரு!" கதீர்.எஸ்.ஹமீட் "பணமா? பாசமா?" உஸாதாசன் காதர்,. "நிஜக்கீறல்கள்" அம்தரவல்லை அமீர்,. "மலர்வாழ மனம்வேண்டும்" செ.ஞானராசா முருங்கன்,. "அறிமுகம் 01" தயாரிப்பு





:-புரட்சிக்கமால்.

அழகிய கையெழுத்து. ஓவியம் அழகு. காத்திரமான கருத்துக்களை உள்ளடக்கிய ஓவியம். உள்ளத்தை ஊடுருவிச்செல்கின்றது. கவிதைகளும் இரசிக்கக் கூடியதாக உள்ளன சுருங்கக்கூறின் ஒரு தரமான றோணியோ  இதழாக இதைக் கருதலாம். கலை இதழ் ஆசிரியருக்கு பாராட்டுக்கள்!  இதில் வெளிவந்த நிலாவாசனின் கவிதையை கொஞ்சம் ஆழமாக பார்ப்போமானால்,

புறப்படு புறப்படு உனக்கொரு வழி சொல்லுகிறேன் புறப்படு புறப்படு என்று ஆயத்தப் படுத்துகிறார் கவிஞர். சமுதாயம் அழிவுக்குள்ளாகிடும் போது மனக்கவலை ஆவேசம்.தன்னை அழித்தேனும் தேசத்தை அழியாது காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் காணப்படுகிறது. உன்னாலும் முடியும் . முடியாது என்று நீ கருதிடாது துணிவுடன் புறப்படு என தட்டிக் கொடுத்து புறப்படவைக்கிறார்.

இக்கவிதையில் வரும் ஒவ்வொரு வரிகளும் வலிகளை சுமந்தப்போதும் வாழ வழிகளை காட்டி நிற்கிறது. தேசத்தேர்தலில் வேசம் குளிக்கலாம். உன்னால் நாசத்தை பெயர்க்கலாம் என்று காத்திரமான கருத்தை அழகுற சொல்லியுள்ளார் கவிஞர் நிலாவாசன்.

**எஸ்.யூ.கமர்ஜான்பீபீ.** (J.P)
வத்தளை

**வேதாந்தம் கூட**
**சுகமாய் உணரப்படும்!**
**தாவி ஓடும்**
**கொல்லைப்புற**
**அணில் குட்டியின் சரசரப்பில்**
**கதவுதட்டும் சூரியவிரல் சுட்டும்–**
**'தீ சுடும் '**
**வாழ்ந்தோர் சொல்கேட்டும்**
**தெளியலாம் . . .**
**தொட்டுப்பார்த்தும்**
**பாடம் கற்கலாம்.**
**'தீக்குள்ளும்**
**ஒரு இன்பமுண்டு'.**

குழலி குமரேசன்




இம்மாத எமது ஆளுமை பன்முகத் திறமைகளுடன் பவனி வரும் கலாநிதி மரீனா இல்யாஸ் ஷாபீயைப் பற்றிய அறிமுகம் இதோ!

இவரது பெற்றோர் :
மஸ்தூரரா - இல்யாஸ்
கணவர் எம். வை. எஸ். ஷாபீ
(புலம் பெயர்வதற்கு முன்பு இலங்கையின் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளராக கடமை புரிந்தவர்)

இவர் பிறந்த ஊரான தெஹி தெனிய மடிகே என்பது சிங்களக் கிராமங்களால் சூழப்பட்ட ஒரு அழகிய சிறிய முஸ்லிம் கிராமம். இவர் கல்வி கற்ற காலத்தில் அங்கே உயர் கல்வி கற்கும் வாய்ப்பு இருக்கவில்லை. முக்கிய பாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக்குறை இருந்தது. போக்குவரத்து பிரச்சினை காரணமாக வெளியில் இருந்து ஆசிரியர்கள் வருவது குறைவாகவும் மாணவர்களுக்கு வெளியில் சென்று கல்வி கற்க போக்குவரத்து ஒரு தடையாகவும் இருந்தது. இத்தகைய சவால்கள் நிறைந்த ஒரு சூழ்நிலையில் கல்வி கற்று, ஊரின் முதலாவது ஆங்கில ஆசிரியராக உருவானவர் இவர். வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்றுக்கு 'புலமைப் பரிசில்' கிடைக்கப்பெற்று, அங்கு



ஆகஸ்ட் 2023 ல் பாரீஸ் நிகழ்வின்போது தமிழ்நெஞ்சம் இதழாசியர் தமிழ்நெஞ்சம் அமின் அவர்களுடன்...

*ஆங்கில முதுமாணிப் பட்டம் பெற்ற முதல் பட்டதாரியாக வெளிவந்து, அதன் பின்பு ஆங்கில விரிவுரையாளராக நியமனம் பெற்றவர்.*

*தெஹி தெனிய முஸ்லிம் மஹா வித்தியாலயம், ஸஹிராக் கல்லூரி மாவனல்லை இவற்றில் கல்வி கற்று, பின்பு பேராதனைப் பல்கலைக்கழகம், மலேசியா சர்வேதேச இஸ்லாமியப் பல்கலைக்கழகம், நியூ ஸிலாந்து விக்டோரியா பல்கலைக்கழகம், ஆக்லாந்து பல்கலைக்கழகம் நியூ ஸிலாந்து போன்ற பல்கலைக்கழகங்களில் பயின்று பட்டம் பெற்றவர். தற்போது நியூ ஸிலாந்தை வதிவிடமாகக் கொண்டுள்ளார்.*

*இவருடைய எழுத்துலகப் பிரவேசம் 1980 களில் தினகரன் சிறுவர் உலகம் மூலம் இலக்கிய உலகில் அடியெடுத்து வைத்ததுடன் ஆரம்பமாகி உள்ளது.*

*இவரது குடும்பத்தில் இவரது தந்தை மர்ஹூம் இல்யாஸ் உட்பட பெரும்பாலானோர் சிங்கள / ஆங்கில மொழிமூலம் கல்வி கற்றவர்கள். அதனால், சிறு வயதில் இருந்தே சிங்களம், ஆங்கிலம், தமிழ் ஆகிய மூன்று மொழிகளையும் கற்பதில் ஆர்வம் காட்டி வந்திருக்கிறார்.*

*தினகரன், சிந்தாமணி, நவமணி, மித்திரன், வீரகேசரி போன்ற தேசிய பத்திரிகைகளிலும், மற்றும் பல்வேறு தமிழ்நெஞ்சம் போன்ற சஞ்சிகைகளிலும் மட்டுமன்றி வானொலியிலும் எழுதி வருகிறார்.*

*எழுத்தாளர் மர்ஹூம் புன்னியாமீன் அவர்கள் சிந்தனை வட்டத்தின் மூலம் தொகுத்து வெளியிட்ட ‘அரும்புகள்‘, ‘பாலங்கள்‘ ஆகிய இரண்டு தொகுப்புகளிலும் இவரது ஆரம்பகாலக் கவிதைகள் சில இடம்பெற்றிருக்கினறன.*

*அதன் பின்னர், 1998 ஆம் ஆண்டு கல்ஹின்னை தமிழ்மன்றம் மூலமாக ‘குமுறுகின்ற எரிமலைகள்‘ என்ற சிறுகதைத் தொகுப்பும் ‘தென்னிலங்கை முஸ்லிம்களின் தமிழ்ச் சிறுகதைகள் - ஓர் ஆய்வு‘ நூலும் வெளியிடப்பட்டன. . ‘குமுறுகின்ற எரிமலைகள்‘ சிறுகதைத் தொகுப்பில் இவரது ஆரம்பகால சிறுகதைகள் 11 இடம்பெற்றுள்ளன.*

*2020 இல் ‘இரவைக் காக்கும் இமைகள்‘ - கவிதைத் தொகுப்பு*

வெள்ளாப்புவெளி மூலம் வெளியிடப்பட்டது. கொரோனா சூழ்நிலையில் இலங்கையில் இணையவெளியில் வெளியீட்டு விழா நடாத்தப்பட்ட முதலாவது நூல் இதுவாகும்.

மஸ்ஜிதுல் அக்சா போன்ற இஸ்லாமிய புனித ஸ்தலங்களையும் குர்ஆனில் கூறப்பட்ட அத்தாட்சிகளையும் (குகை வாசிகள், சாக்கடல், பிர் அவ்னின் உடல், ஸலாஹுத்தீன் ஐயூபின் கோட்டை) நேரில் சென்று பார்த்துவிட்டு முகநூலில் பயணக்கட்டுரை தொடரொன்று எழுதி வந்திருக்கிறார்..அதுவே பின்னாளில் 'என் சிறகில் சிக்கிய வானம்' என்ற தலைப்பில், பிரான்ஸிலிருந்து - தமிழ்நெஞ்சம் இலக்கிய வட்டம் அந்தக் கட்டுரைகளை தொகுத்து இந்த வருடம் நூலுரு செய்திருக்கிறது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முஸ்லிம் சேவையில் இவர் எழுதிய சுமார் 30 நாடகங்கள் ஒலிபரப்பாகி உள்ளன. இவர் எழுதிய 'பாறையில் பூத்த மலர்' என்ற தொடர் நாடகம் ஒன்றும் ஒலிபரப்பாகி உள்ளது.

ஆஸ்திரேலியாவில் இருந்து ஒலிபரப்பாகும் 'வளர்பிறை' வானொலி நிகழ்ச்சியில் ஓர் அறிவிப்பாளராகவும், நிகழ்ச்சித் தொகுப்பாளராகவும் இருந்து வந்துள்ளார்.

**06.08.2023 அன்று பிரான்ஸ் நாட்டில் வென்மோரி அறக்கட்டளையின் தமிழ் ஆளுமை களுக்கான உயர் விருது வழங்கப்பட்ட நிகழ்வுகளின் போது, கலாநிதி ம. மு. உவைஸ் அவர்களின் ஞாபகார்த்தமாக வாழ்நாள் சாதனையாளர் விருது பெற்றுக்கொண்ட தருணம் .**



‘சந்திப்பு‘ என்ற நிகழ்ச்சியின் மூலம் வளர்ந்த, வளரத் துடிக்கின்ற கலைஞர்களை , சமூக சேவையாளர்களை இனங்கண்டு அடையாளம் காட்டிய இவர். ஹஜ்ஜு பெருநாள், நோன்புப் பெருநாள் கவியரங்குகளையும் தலைமை தாங்கி நடாத்தி இருக்கிறார்.

இவர் எழுதும் நாடகங்களில் பல பாத்திரங்களை இவரே ஏற்று நடித்திருக்கிறார். மேலும்,இவரே எழுதிய ‘இலையுதிர் காலம்‘ என்ற நாடகத்தில், கணவன் - மனைவி, சிறுமி, வயதான தாய், பக்கத்து வீட்டுப் பெண் என்று எல்லாப் பாத்திரங்களிலும் இவரே நடித்திருந்ததும் பாராட்டுக்குரிய விடயமாகும்.

கவிதை, சிறுகதை, நாடகம், ஊடுருவல் சமூகச் சித்திரம், தன்னம்பிக்கை ஊட்டும் பேச்சுத் தொடர் போன்ற பல நிகழ்ச்சிகளை வளர்பிறையில் வழங்கி இருக்கிறார்.

---

**மலேசியாவில் ஒரு தலைமைத்துவப் பயிற்சிக் கருத்தரங்கில் கலந்துக்கொண்ட போது...**



‘வளர்பிறை‘ நிகழ்ச்சித் தயாரிப்பாளர் முஹம்மது எஸ். முஹசீன் அவர்கள் தனது பரீட்சார்த்த முயற்சிகள் அனைத்துக்கும் களம் கொடுத்து தன்னை ஊக்கப் படுத்தியதை நினைவு கூர்ந்து நன்றி தெரிவிக்கிறார் எமது ஆளுமை.

லண்டன் ‘முஸ்லிம் குரல்‘ வானொலி நிகழ்ச்சிக்கும் சிறிது காலமாக பங்களிப்பை நல்கிய மரீனா இல்யாஸ் ஷாபீ, ஆஸ்ட்ரேலியாவில் இருந்து ‘வளர்பிறை‘ வானொலி நிகழ்ச்சியில் ஒலிபரப்பாகும் தனது நாடகங்கள் சில YouTube சேனல் இல் பதிவேற்றப் பட்டு ஆவணப்படுத்தப் பட்டுள்ளதாகவும் குறிப்பிடுகிறார். https://www.youtube.com/watch?v=TI-pMFdu4GSE

சிறு வயதில் இருந்தே மேடைப் பேச்சுகளிலும் விவாத அரங்குகளிலும் ஆர்வம் காட்டி வந்த இவர், தற்போது உற்சாகமூட்டும் பேச்சாளராக உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பல மேடை நிகழ்ச்சிகளில் பேசி வருகிறார்.

இன - மத நல்லிணக்கத்தை உருவாக்கும் பணிகளில் இவர் காட்டும் அக்கறை காரணமாக உலக சமாதான தினம் போன்ற நிகழ்வுகளுக்கு தொடர்ந்தும் ஒரு பேச்சாளராக அழைக்கப்படுவதையும் பெருமிதத்துடன் குறிப்பிடுகிறார்.

2019 மார்ச் மாதம் நியூ ஸிலாந்து கிரிஸ்ட்சர்ச்சில் நடந்த பள்ளிவாசல் படுகொலைத் தாக்குதலை தொடர்ந்து, தாக்குதலுக்கு



வாழ்நாள் சாதனையாளர் விருது பெறுவதற்காக கணவர் எம்.வை .எஸ் . ஷாபி அவர்களுடன் மேடையில் தோன்றிய தருணம் .

காரணமானவனை தூக்கிலிட வேண்டாம் என்று நியூ ஸிலாந்து பாராளுமன்ற உறுப்பினர்கள், ஆக்லாண்ட் நகரபிதா, மத நல்லிணக்க தலைவர்கள் மத்தியில் இவர் ஆற்றிய உரை பரபரப்பாக பேசப்பட்டது. இணையவழி பத்திரிகைகளிலும் முகநூலிலும் இது மிகவும் பரவலாகப் பகிரப்பட்டது.

இவர் பல சர்வதேச கருத்தரங்குகளிலும் கலந்து கொண்டு ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பித்துள்ளார்.

மொழிபெயர்ப்புத் துறையிலும் இவர் மிகுந்த ஆர்வம் காட்டி வருகின்றார்.. தற்போது ஸ்ரீலங்கா ‘பென் கிளப் ‘அமைப்பில் நடக்கும் அறிவியல் புதன் என்ற நிகழ்ச்சிக்காக நமது பெண்களின் கவிதைகளைத் தெரிவு செய்து, மாதம் ஒரு கவிதையை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வழங்கி வருகிறார்.

இந்த மொழிபெயர்ப்புக் கவிதைகளின் தொகுப்பு ஸ்ரீலங்கா ‘பென் கிளப்‘ அமைப்பின் மூலம் விரைவில் நூலுருப் பெற உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

பயனுள்ள ஆங்கில ஆக்கங்களையும் தமிழில் மொழி பெயர்த்து வருகின்றமையும் பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

உளவியல் ஆலோசனைகள் வழங்குதல், இன மத நல்லிணக்க செயற்பாடுகளில் ஈடுபடுதல், அகதிகளின் மறுவாழ்வு / கல்வி நடவடிக்கைகளை முன்னெடுப்பது,




மலேசியாவில் இஸ்லாமிய செயலமர் வொன்றில் கலந்து கொண்டதற்கான அங்கீகாரம்

இளைஞர் / யுவதிகளுக்கான வழிகாட்டல் நிகழ்ச்சிகள் நடாத்துவது போன்ற பல்வேறுபட்ட சமூகப் பணிகளில் ஈடுபட்டு வருகிறார்.

உலகெங்கும் சுற்றிப் பார்த்து, இறைவனின் அருட் கொடைகளைக் கண்டு களிக்க வேண்டும் என்ற அவா எப்போதும் இவருக்குள் இருந்து வருகிறது. தனது பயண அனுபவங்களை முகநூல் வழியாக தொடர்ந்தும் பகிர்ந்து வருகிறார்.

அண்மையில் துபாய், லண்டன், பாரிஸ் நகரங்களுக்கு சென்று வந்திருப்பதுடன், அந்த அனுபவங்களையும் முகநூல் மூலம் பகிர்ந்து கொள்ளப் போவதாக குறிப்பிட்டுள்ளார்.

படிக்கும்போது பாடசாலை மட்டத்திலும், மாவட்ட / மாகாண / தேசிய ரீதியிலும் இலக்கியப் போட்டிகளில் பல பரிசுகள் வாங்கியுள்ள இவர், பல்கலைக்கழக மட்டத்தில் பீடங்களுக்கிடையிலான இலக்கியப் போட்டிகளிலும் வெற்றியீட்டி உள்ளார்.

1999 இல் மத்திய மாகாண முஸ்லிம் கலைஞர் கௌரவிப்பில் ‘கலைச்சுடர்‘ பட்டம் வழங்கப்பட்டு கௌரவிக்கப் பட்டிருக்கிறார். (அத்துடன் புலம் பெயர்ந்து நியூ ஸிலாந்து சென்றுள்ளார்.)

அகதிகளின் கல்விப் பணியில் இவர் ஆற்றும் சேவையை கௌரவிக்கும் முகமாக ‘நியூ ஸிலண்ட் ஹெரால்ட்‘ தேசிய பத்திரிகை இரண்டு தடவைகள் இவரது பேட்டியை வீடியோ வடிவில் வெளியிட்டது.

இலங்கை வானொலி முஸ்லிம் சேவைக்கு இவர் ஆற்றிய பங்களிப்பை கௌரவிக்கும் முகமாக ‘பாரம்பரியம்‘ என்ற முஸ்லிம் நிகழ்ச்சிக்கு 02 . 03 . 2021 இல் இவர் அதிதியாக அழைத்து வரப் பட்டுள்ளார். வெளிநாட்டில் இருந்து இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட முதலாவது அதிதி இவர் என்பதும் குறிப்பிடத் தக்கது.

அதைத் தொடர்ந்து முஸ்லிம் சேவையின் ‘மாதர் மஜ்லிஸ்‘ நிகழ்ச்சியில் சர்வதேச பெண்கள் தின பேச்சாளாராகவும் கலந்து கொண்ட இவரது பேட்டியும், சிறப்பு நிகழ்ச்சிகளும் மாதர் மஜ்லிஸ் நிகழ்ச்சியில் பல தடவைகள்

*ஒலிபரப்பாகி இருக்கின்றன.*

*இலங்கை முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள் பற்றிய அறிமுக நூலான 'மின்னும் தாரகை' என்ற நூலில் எமது ஆளுமையைப் பற்றிய மிகவும் சுருக்கமான ஒரு குறிப்பு இடம்பெற்று இருக்கிறது.*

*06.08.2023 அன்று பிரான்ஸ் நாட்டில் பாரிஸ் நகரில் இடம்பெற்ற வென்மேரி அறக்கட்டளையின் தமிழ் ஆளுமைகளுக்கான உயர் விருது வழங்கப்பட்ட நிகழ்வுகளின் போது, கலாநிதி ம. மு. உவைஸ் அவர்களின் ஞாபகார்த்தமாக இவருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப் பட்டிருக்கிறது. பன்முகத் திறமைகள் கொண்டவராக இருந்தாலும், தன்னடக்கத்தில் சிகரம் தொடும் எமது ஆளுமை மரீனா இல்யாஸ் ஷாபீயை முத்தமிழ் கலசம் சார்பாக வாழ்த்துகிறோம்!*

---

இன - மத நல்லிணக்க நிகழ்வொன்றில் கலந்து கொண்ட பின்



## பெய்யெனப் பெய்யும் மழை

மழை பெய்ய தொடங்க
கொடியில் காய வைத்த துணிகளை
உருவிக்கொண்டு வீட்டிற்குள் ஓடும்
குடும்பத்தலைவி

வாகன ஓட்டிகள் ஆங்காங்கே
நிழற்குடைகளின் கீழ்
ஒதுங்க
கூடுகளுக்குத் திரும்பும்
புள்ளினங்கள்

பேரூந்துநிறுத்த நிழற்குடையில்
ஒடுங்கிப் படுத்தவர்
எழுந்து நிற்கிறார் கையில்
துணிமூட்டையைப் பற்றியவாறு

மழை விட்டதும்
அவரவர் இருப்பிடம் நோக்கி
அவரவர் விரைய

ஈரமான தரை
ஈரமின்றி பறித்துச் செல்கிறது
அவரின் எஞ்சிய தூக்கத்தை

வாலாட்டியபடி வந்து
நிற்கும் மணிக்கு
பிஸ்கட்டை போட
தின்று முடித்து காலடியில்
படுத்துக் கொள்ளும் நன்றியுரு

நீள்கிறது மழையிரவு
அவர்களுக்கு மட்டும்



**- பா.சிவகுமார்**

## பாவேந்தல் பாலமுனை பாறூக்கின்

# நகைப்பாக்களும் குறும்பாக்களும்

### நகைப் பா – 1

## ஆடிப்போய் நின்றான் அவன்!

*தேர்தல் கேட்டவனாம்*
*தேடித்தான்  வந்தான்*
*ஊர்க்காரன் நானென்றான்*
*உறவென்றான்,*
*அழுதான் சிரித்தான்,*
*மாமியென விளித்தான்..*
*குடும்ப மென்றான்!*

*'கண்டு கன காலம் மாமா. .*
*சுகம் தானே'*
*என்றவளைக் கேட்டான்*
*வந்த 'உறவாளன்'!*

*மாமி.. சிலிர்த் தெழுந்தாள்*
*'மாமா வோ? அவர்,*
*மரணித்துப் பல வருடம்!..*

*இதுவும் தெரியாமல்*
*இருந்தவன் நீ,*
*இப்போது*
*'உறவென்று வந்தாயோ?*
*ஓய்.., தம்பி,பேசாதே!*
*ஓடிப்போ' என்றாள்!*
*ஒருகையில் பொல்லெடுத்தாள்!*

*ஆடிப்போய் நின்றான் அவன்!*

### நகைப் பா – 2

## பாத் ரூமே பிரிஜ்ஜாகி..!

*பிரிந்திருந்த தம்பதியை*
*பெரியோர்கள் சேர்ந்து*
*சேர்த்து வைத்துச் சென்றார்கள்!*

*சிறுநீர் கழிக்கச்*
*சென்று வந்தார் கணவர்!*

*'ஒருசில வருடம்தான்*
*உன்னை நான் பிரிந்தி ருந்தேன்*
*அதற்குள்ளே*
*அழகாக 'பாத்ரூமை'*
*அமைத்துள்ளாய்*
*கதவைத் திறந்தால்*
*கலர்கலராய் மின்னொளி யே*
*பாய்கிறதே,பாராட்டு '*

*என்றாராம் கணவர்.*

*'பாவி மனுசா, குடிவெறியில்,*
*பெரிதாக வாங்கி வைத்த*
*பிறிஜ்ஜைத் திறந்து*
*பேய்வேலை பார்த்துள்ளாய்..!'*

*என்றவரை அடித்து*
*விரட்டினளாம்*
*மனைவி!*

குறும்பா – 1

## boss ம் நாயும்

'பொஸ்'வீட்டு நாய்இறந்த தென்று
போய்நின்று அழுதார்கள் அன்று
'பொஸ்'இறந்து போனார்
போகவில்லை யாரும்
'பொஸ்' இல்லை
யார்பார்ப்பார் என்று..!

குறும்பா – 2

.....................................................

## பழுத்த ஓலை

பணிமனையில்
அன்றெனக்கு மதிப்பு
'பைக்' ஓடி வருகையிலும் ரசிப்பு
எனைக்கண்டு கண்ணடித்து
என்பின்னால் அலைவார்கள்..
இப்போதோ எனைப்பார்த்து
நகைப்பு!



# தேவதை வேண்டும்

பத்து மாதம் சுமந்து
பத்திரமாய் நடந்து
பக்குவமாய் பெற்றெடுக்க
ஆசை கொண்டேன் -
எனக்கொரு தேவதையை....

அவள் பிறப்பினில் - என்
அழுகையோடு - அவள்
அழுகையை ஆறுதலாய்
கேட்டேன் இறைவனிடம்
பரிசாக எனக்கொரு
தேவதையை....

ஆசையாய் முத்தமிட்டு
ஆவலாய் தோளில் சாய்த்து
ஆரத் தழுவி மடியில் வைத்து
அள்ளி அணைத்துக் கொள்ள
ஆசையாய் கேட்டேன் - எனக்கொரு
தேவதையை....

இன்னல் மறந்து
இயல்பு வாழ்கையில்
இங்கிதமாய் வழி நடத்தி
இன்பமாய் வாழ்ந்திட இறைவனிடம்
கேட்டேன்
எனக்கொரு தேவதையை..

ஈன்றெடுக்க முடியாமல்
ஈறு கொண்டதா என் உடல்??
ஈகை இறைவன் - இன்னும் தான்
தரவில்லை
எனக்கொரு தேவதையை...

கவிதைகள் மை கொண்டு காகிதங்கள்
நனைக்கிறது..
கண்ணீர் துளிகளோ- என் தலையனை
துவைக்கின்றது....
எப்போது எனக்கொரு தேவதை வருவாள்
என....

மின்னத் ஸறா பரூஸ்

# இனிய வாழ்வியலுக்காய்

*எமக்கு பிடித்தவர்கள் தாங்கள் அதிகமான மனவேதனையில் இருக்கும் போது பெரும்பாலும், அவர்களுக்கு அருகில் இருக்கும் நம் மீதுதான் காரணமே இல்லாமல் குற்றம் சாட்டுவார்கள்.*

*உதாரணமாக;*

*'குழந்தைக்கு பாருங்க; எப்படி காய்ச்சல் அடிக்குது. போன கிழமை நீங்கள் பேமண்ட்ல வாங்கிக் கொடுத்த மாம்பழம்தான் காரணம்'*

*'நான் அவ்வளவு வலியில துடித் தேன். நீங்கள் ஏனோ தானோன்னு தான் கேட்டீங்க. அக்கறையா கேக்கல?'*

*இது மாதிரி, அவர்கள் மிகுந்த மனநெருக்கடியில் இருக்கும் போது அந்த நேரத்தில் அருகில் இருக்கும் நம் மீதே குற்றம் சாட்டுவார்கள்.*

*இப்படி குற்றம் சாட்டும் போது; நீங்கள் உங்களுக்கு பிடித்தவர்களின் மனவேதனையை அக்கறையோடு பார்ப்பீர்களா? அல்லது நீங்கள் குற்ற மற்றவர் என்று நிருபிப்பீர்களா?*

*இரண்டையும் நிச்சயம் செய்ய வேண்டும். ஆனால், எதை முதலில் செய்ய வேண்டும்? நம்மில் பலர் உடனே தான் குற்றமற்றவர் என்று நிருபிப்பதிலேயே குறியாக இருப்பார்கள்.*

*''நான் குற்றமற்றவன். நான் உன்னை நேசிப்பவன்" என்று தன்னைத் தானே நிருபிப்பதிலேயே கவனத்தை செலுத்துவார்கள்.*

*இதுதவறானஅணுகுமுறையாகும்.*

*அவர்கள் மனவேதனையை கேட்டுக் கொண்டு அன்போடு ஆறுதல் சொல்வதுதான் முதல் வேலை யாக இருக்க வேண்டும். அந்த இடத்தில் உங்கள் "நான்" என்ற ஒன்றை நீங்கள் தாராளமாக விட்டுக் கொடுக்க லாம்.*

*"ஆமா! நான் இன்னும் உன்கிட்ட அக்கறையா கேட்டிருக்கலாம். அப்ப ஒரு வேலையில இருந்தேன். Sorry, உன் வருத்தம் புரியுது...'' என்ற ரீதியில் அந்த மனவேதனையை சரி செய்வதிலேயே குறியாக இருக்க வேண்டும்.*

*நமக்குப் பிடித்தவர்கள் குறித்த அந்த பிரச்சினையில் இருந்து தெளிந்த பிறகு, அன்று நாம் இருந்த நிலை மையை சொல்லி, "நான் குற்ற மற்றவன்'' என்று பின் நிருபிக்க வேண்டும்.*

*தயவு செய்து இந்த Policy யெய் உங்களை பிடிக்காதவர்கள், எதிரிகள், உங்களை குறை சொல்ல காத்திருப்பவர்கள் மற்றும் அலுவல கத்தில் உங்கள் மேல் அரசியல் செய்யும் அதிகாரிகள் போன்றோரிடம் இதைக் காட்டிவிடாதீர்கள்!*

*அங்கே உங்கள் மீதான குற்றச் சாட்டுகளை உடனே மறுத்து விடுங்கள்!*

*Moral : எந்த பிரச்சினைக்கும் முதலில் செய்ய வேண்டியது என்று ஒன்று இருக்கிறது. எது முதலில், எது அடுத்தது என்பதைத் தீர்மானிப்பது முக்கியம். அதேபோல்; யாரிடம் எது முதலில், எது அடுத்தது என்பதைத் தீர்மானிப்பதும் அதை விட முக்கியம்.*

*எளிது எளிது!! வாழ்தல் எளிது!*

**- சஞ்சய்**

# உயிரின் பூக்களில்...

என் இதயத்தரிசு
நிலத்தில்
மழையென இறங்கியது
-உன் காதல்..

மழைக்காதலில்
மண்ணிலிருந்து
வெளிக்கிளம்பி
வியாபிக்கும்
மண்வாசனையாய்
நம் பந்தம்..

நாடோடி என்னை
நடமாட விடாமல்
செய்து விட்டது
உன் நேசவலை

என் இதய வேம்பில்
உருவாக்கினாய்
பிரியத்தின்
திராட்சைக்கனிகள்...

கறுப்பு வெள்ளைக் கண்கள்
உன்னைப் பார்த்ததும்
கொண்டாடும்
ஹோலிப் பண்டிகை....

கண்களால்
கத்திச்சண்டை செய்கிறாய்
ஆனாலும்
என்னிதயத்தில்
வெண்புறாக்கள் அன்பே...

என் விழிகளுக்குள்
வானவில் வர்ணங்களை
விசிறிய
கைங்கரியம்தான் என்ன?

இமைகளுக்கு
கருமை பூசினாய்
இதயத்தின் சுவர்களில்
இனிக்கும்
செம்மை சேர்த்தாய்...

என் விழிகளுக்குள்
விரியும்
கவிதைப் புத்தகம்-நீ...

உனைக்கண்ட
நாள் முதல்
அமுதசுரபியாகிறது
உள்ளம்....

ஊற்றெடுக்கும்
கவிதைப் பூக்கள் மீண்டும்
உன் விழிக்
கருவண்டுகளைத்
துரத்தும்...

மாயங்கள் மட்டுமே
புரியும்
மந்தகாச ஒளி
உன் மலர்ப்புன்னகை

மேகங்கள் போல
சூழ்கிறாய்
மோகனப் புன்னகையால்
இதயத்தில்
மழை பொழிகிறாய்

வறுமையில் கிடந்த
என் இதயத்தின்
செல்வம் நீதான்

வாழ்வின் சீதளம்
உன்னால் மட்டுமே
முடிவிலி அன்பால்
உயிரின் பூக்களில்
ஆரோகணிக்கிறேன்

Dr ஜலீலா முஸம்மில்
ஏறாவூர்- இலங்கை




பாரிஸிலிருந்து தமிழ்முழங்கும்
தமிழ்நெஞ்சம்
படிக்கத் தவறாதீர்கள்
இணையத்தில்
இதழாகக் கிடைக்கும்
tamilnenjam.com
தொடர்புகளுக்கு
editor@tamilnenjam.com